தமிழர் கூட்டணி நடவடிக்கைகளைக் கண் காணிப்பதற்கு

# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 | விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2003, மார்கழி 10 உ (24-12-72) ஞாயிறு ஜுலியஸ் 17 | புத்தகம் 26 இதழ் 3


# இரகசிய பொலிஸ் அதிகாரி சென்னையில் நியமனம்!

## இலங்கை அரசு திடீர் நடவடிக்கை!

இலங்கைத்தமிழர்களின் விடுதலை இயக்கமான தமிழர் கூட்டணிக்கும் தமிழக திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கும் அரசியல் ரீதியான தொடர்பு உண்டா என்பதை கண்காணிப்பதற்கு ஓர் உயர்தர இரகசிய பொலிஸ் அதிகாரியை இலங்கை அரசு சென்னைக்கு அனுப்பி வைத்துள்ளதாக தெரிய வருகிறது.

இந்த அதிகாரி சென்னையிலுள்ள இலங்கை தூதுவரகத்தில் இப்போது தங்கியிருப்பதாக அறிய வருகிறது.

இலங்கையிலிருந்து தமிழ்நாடு செல்லும் தமிழரசுக்கட்சி உறுப்பினர்களையும், மற்றும் தமிழர் கூட்டணி பிரமுகர்கள் ஆதரவாளர்களையும் கண்காணிப்பதற்கும் சென்னையில் அவர்களது நடவடிக்கைகளை அறிந்து இலங்கை அரசுக்கு தகவல் கொடுப்பதற்குமாகவே இந்த அதிகாரி அங்கு அனுப்பப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது.

தற்போது சென்னையில் வசிக்கும் முன்னாள் இ. தி. மு. க பொதுச்செயலாளர் திரு ஏ. எஸ். மணவைத் தம்பியையும், இலங்கையைச்சேர்ந்த ஒரு இரகசிய பொலிஸ் அதிகாரி விசாரணை செய்ததாகவும் தெரிய வருகிறது.

## நிழல் அமைச்சரவை தமிழர் கூட்டணி அமைத்துள்ளதாம்

''இலங்கையில் தனிநாடு கோரிப்போராடி வரும் தமிழர் கூட்டணியினர், தம்முடைய போராட்டத்துக்கு முன்னோடியாக ஒரு ''நிழல் அமைச்சரவையை' (Shadow cabinet) அமைத்துள்ளதாகவும் (சிங்கள) 'ஸ்ரீலங்கா' வுக்கு ஒரு அரசாங்கத் தூதுவரையும் நியமித்துள்ளதாகவும் சென்னையில் பிரபல ஆங்கில ஏடான 'இந்து' 3-12-72 இதழில் ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

## காசி ஆனந்தன் வண்ணை ஆனந்தன்

சிறையில் இன்று

198-வது நாள்



அன்பு விளங்க
அறம் விளங்க
இன்பம் பொங்க
துன்பம் ஒழிந்திட
மன்பதை யெங்கும்
மனிதகுலம் வாழ்ந்திட
தன்னுயிர்தந்த தேவன்
தாளிணை தலைமேற்
கொள்வோம்!

● எல்லோருக்கும் எமது நத்தார் வாழ்த்துக்கள்!

## "ஒற்றை ஆட்சி தோற்றுவிட்டது சமஷ்டி ஆட்சியே இனி ஒரேவழி!"

### சிங்கள அறிஞர் துணிந்து சொல்கிறார்!

''ஒற்றை ஆட்சிமுறை இலங்கையின் இனப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது தோல்வியடைந்துவிட்டது. சமஷ்டி ஆட்சி முறை ஒன்றினாலேயே இந்நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்—''

—இவ்வாறு துணிச்சலுடன் உண்மையை எழுதியிருக்கிறார் வித்தியோதய பல்கலைக்கழகத்தின் ஆங்கில பேராசிரியரான திரு. பந்துல ஸ்ரீகுணவர்த்தன அவர்கள்.

தமிழ் மக்கள் கடந்த 20 ஆண்டுகளாக சமஷ்டி ஆட்சி அமைப்புக் கோரிக்கையை முன்வைத்து வந்தும், அது பெரும்பான்மைச் சிங்களவர்களால் ஏற்கப்படாத நிலையில் இன்று 'தனிநாடு' பற்றி சிந்திக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையில்தான், சிங்களப் பிரமுகரான திரு. குணவர்த்தன 'டைம்ஸ் ஆப் சிலோன்' ஏட்டில் முறையே 6.11.72, 14.12.72 ஆகிய திகதிகளில் சமஷ்டி ஆட்சி முறையை ஆதரித்தும், ஒற்றையாட்சி தோற்றுவிட்டது என்று கண்டித்தும், இரு கடிதங்களை எழுதியுள்ளார்.

திரு. பந்துல குணவர்த்தனவின் சமஷ்டிக்கு ஆதரவான இந்தக் கருத்தை சிங்களவர்கள் எவரும் இதுவரை எதிர்த்து எழுதவில்லை; ஆனால் இரண்டு கொழும்புத் தமிழர்களான திரு. பெருமாள் என்பவரும், திரு. டி. ஜே. தாமோதரம் என்பவருமே எதிர்த்து எழுதியிருக்கிறார்கள். அதற்கும் திரு. குணவர்த்தன பதிலளித்துள்ளார்.

இக்கடிதங்களில் திரு. குணவர்த்தன எழுதியுள்ளதாவது:-

''நாங்கள் சுதந்திரம் பெற்ற 1948ம் ஆண்டிலிரு

(7-ம் பக்கம் பார்க்க)

## சிறிமா—சாத்திரி ஒப்பந்தம்

### இன்றைய அதன் நிலை!

1964ம் ஆண்டு உருவாக்கப்பட்ட சிறிமா—சாத்திரி ஒப்பந்தத்தின் இன்றைய நிலை வருமாறு:-

இந்தியப் பிரஜாவுரிமை

● ஒப்பந்தப்படி இந்தியப் பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டியவர்களின் தொகை 5 இலட்சம்!

● தாமாகவே விரும்பி இந்தியப் பிரஜாவுரிமை கோரி விண்ணப்பித்தவர்கள் தொகை 4 இலட்சம்.

● இந்திய பிரஜாவுரிமை இதுவரை வழங்கப்பட்டோர் தொகை—1 இலட்சத்து, 39 ஆயிரத்து 739.

● இதில் இந்தியாவுக்கு திரும்பி அனுப்பட்டோர் தொகை—70,000.

இலங்கைப் பிரஜாவுரிமை:

● இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்படவேண்டியோர் தொகை — 3 இலட்சம்.

● இலங்கைப் பிரஜாவுரிமை கோரி தாமாகவே விரும்பி விண்ணப்பித்தோர் தொகை — 6 இலட்சத்து 25 ஆயிரம்.

● இலங்கைப் பிரஜாவுரிமை இதுவரை வழங்கப்பட்டவர்களின் தொகை—40,359.

● இலங்கைப் பிரஜாவுரிமை கோரிய மனுக்களில் 55,000, மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன — 8,840 மனுக்கள் வாபஸ் பெறப்பட்டன.

(15-12-72ல் தேசியபேரவையில் பிரதமர் தெரிவித்த தகவல்)

இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் உரிமைக்குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.மு.க.வும் எம்.ஜி.ஆரும்!

## கழகக் கோட்டை அழியாது! தனி மனிதர் புகழ் நீடிக்காது!

தமிழ் சினிமாவில் கதாநாயகனாக விளங்கிய எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் இன்றைக்குத் தமிழ்நாட்டு அரசியலில் கதாநாயகனாக விளங்குகிறார் எந்த தி. மு. க. வின் மூலம் அவர் பிரமாண்டமான மக்கள் செல்வாக்கைப் பெற்றாரோ, அந்த தி. மு. க. வை அழித்தே தீருவேன் என்று அவர் கங்கணம்கட்டிக் கொண்டே நிற்கிறார். தி. மு. க. வினால் பெற்ற செல்வாக்கைக் கொண்டே தி. மு. க. வை அழிக்கத் துடிக்கிறார். தீட்டிய மரத்திலேயே கூர்பார்க்கத் துணிந்து விட்டார் திரு. எம். ஜி. ராமச்சந்திரன்.

தி. மு. க. விலிருந்து எம். ஜி. ஆர். விலகுவதற்கு முன்பு அவர் மீது நாங்கள் வைத்திருந்த மதிப்பு ஏராளம் ஏராளம். எம். ஜி. ஆர். ஒரு கொள்கைவாதி. எம். ஜி. ஆர். ஒரு ஏழைப் பங்காளன். எம். ஜி. ஆர். ஒரு நாணயஸ்தர். இப்படியாகத்தான் எம். ஜி. ஆரைப் பற்றி நாங்கள் நினைத்திருந்தோம். ஆனால் இப்போதைய எம். ஜி. ஆரின் நடவடிக்கைகளைப் பார்க்கும் போது நாம் அவர்மீது இவ்வளவு காலமும் வைத்திருந்த மதிப்பெல்லாம் சிறிது சிறிதாகக் குறைய ஆரம்பித்துவிட்டது என்பதை மிகவும் வருத்தத்துடன் ஒப்புக்கொள்ள வேண்டும் போல்தான் இருக்கிறது.

தி. மு. க. ஆட்சிபீடம் ஏறிய நாள் முதலே அதனைக் கவிழ்த்துவிட வேண்டும் என்று கச்சை கட்டிக் கொண்டு கிளம்பியவர்கள் பலர். சாமானியர்களாகிய தி. மு. க. வினர் நாட்டை ஆள்வதா என்று காழ்ப்புணர்ச்சியுடன் கொதித்தெழுந்தவர்கள் பலர்? அத்தகையோருக்கு தமிழ் நாட்டிலுள்ள முதலாளித்துவ ஏடுகளும் தூபம் போட்டன.

தி.மு.க. ஆட்சியில் ஏழைகள் ஏற்றமடைந்தனர் என்பது மறுக்கமுடியாத உண்மை. தமிழின் பெருமையை உயர்த்துவதற்கு அவர்கள் முழுமூச்சாகப் பாடுபட்டனர். ஏழை, நடுத்தர மக்களின் வயிற்றிலடிக்காத வண்ணம் அவர்கள் திட்டங்கள் தீட்டினர். இத்தகைய தி. மு. க. வின் நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் அவர்களுடைய செல்வாக்கை உயர்த்தவே பயன்பட்டது.

இது தி. மு. க. எதிர்ப்பாளர்களுக்குக் கிலியை உண்டு பண்ணியது. கொள்கையைச் சொல்லித் தி. மு. க. வை எதிர்க்கத் துணிவில்லாத இவர்கள் கடைசியாகத் தொடுத்த அஸ்திரம் தான் ஊழல் குற்றச்சாட்டு. சென்ற ஆண்டு நடைபெற்ற தேர்தலில் கூட ஊழல் குற்றச்சாட்டுதான் மகத்தான இடத்தைப் பெற்றிருந்தது. ஆனால் தமிழ் நாட்டு மக்கள் இதற்குச் செவிசாய்க்காதது மட்டுமல்ல, தி. மு. க. வை மாபெரும் பலத்தோடு

**பொ. கலைச்செல்வி**

ஆட்சி பீடமும் ஏற்றினர். இதன் பின்பாவது தி. மு. க. எதிர்ப்பாளர்கள் ஓய்ந்தார்களா, இல்லை. திரும்பவும் பழைய பல்லவியையே பாடிக்கொண்டிருந்தனர்.

தமிழ் நாட்டின் பெரிய முதலாளித்துவப் பத்திரிகைகள் யாவும் நாளும் பொழுதும் தி. மு. க. வுக்கு எதிரான பிரசாரத்தையே செய்து வந்தன. இத்தகையதொரு கட்டத்தில்தான் எம். ஜி. ஆர். பிரச்சினை தோன்றியது. வெறும் வாயை மென்று கொண்டிருந்த எதிர்க் கட்சியினருக்கு அவல் கிடைத்தது. தி.மு.க. ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு எம். ஜி. ஆர். ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டார்.

எம். ஜி. ஆருக்கு 'பாரத்' பட்டம் கிடைத்தபோது அது முறையல்ல என்று மூர்க்கத்தனமாக எதிர்த்தவர்கள்கூட எம். ஜி. ஆரைத் தலைக்குமேல் வைத்துக் கொண்டு கூத்தாடினர். விளைவு தி. மு. க. எதிர்ப்பாளர் பட்டியலில் எம். ஜி. ஆர். என்றொரு மனிதரும், அவர்தம் சகாக்களும் சேர்க்கப்பட்டனர். பத்திரிகைகள் மத்தியில் எம். ஜி. ஆர். முடிசூடா மன்னன் ஆனார். இந்தியப் பத்திரிகைகள் மட்டுமல்ல, இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைகள் கூட எம் ஜி. ஆர். விஷயத்தைப் பயன்படுத்தி இலங்கைத் தமிழர்களின் மத்தியில் தி மு. க. வுக்கு இருக்கும் செல்வாக்கை அழித்துவிடலாம் என்று மனப்பால் குடித்தன. தி. மு. ஆட்சி அழிந்தே விட்டது என்று முடிவு கட்டியும் விட்டார்கள். ஆனால் ஒன்றை மட்டும் அவர்கள் புரிந்து கொள்ள வில்லை. தனிப்பட்ட மனிதர் ஒருவரின் செல்வாக்கை மட்டும் வைத்துக்கொண்டு அரசியல் மாற்றம் ஒன்றைச் செய்துவிட முடியாது என்ற உண்மையை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

எம். ஜி. ஆருக்கு இன்று மக்கள் மத்தியில் மாபெரும் செல்வாக்கு இருக்கின்றது என்பது உண்மைதான். ஆனால் அத்தகைய செல்வாக்கு தி. மு. க. வினால் தான் உண்டாகியது என்பதை அவர்கள் ஏனோ மறந்துவிட்டார்கள். சினிமாவில் அவர் அண்ணாவின் கொள்கைகளையும் தி. மு. க. வின் கொள்கைகளையும் கூறிக்கூறி அதன் மூலம் சினிமா ரசிகர்களைச் சம்பாதித்துக் கொண்டார். எம். ஜி. ஆர். மீது

### ஒரு கருத்து

சினிமா ரசிகர்களுக்கு இருக்கும் ஒரு விதமான பக்தியை வைத்துக்கொண்டு, ஒரு மாபெரும் அரசியல் இயக்கத்தை அழித்துவிடலாம் என்று நினைப்பது பைத்தியக்காரத்தனமான எண்ணமாகும். எம். ஜி. ஆரின் செல்வாக்கு நீடிக்கும் மட்டும் தானே அவருடைய கட்சியும் நீடிக்கும்!

தி. மு. க. வை அண்ணா அமைத்தபோது அண்ணா என்ற தனிமனிதருக்காக அந்தக்கட்சி அமைக்கப்படவில்லை. காலத்தால் அழிக்க முடியாத கொள்கைகளையும் இலட்சியங்களையும்கொண்டு தான் தி. மு. க. உருவாகியது. தனிப்பட்ட அண்ணாவுக்காக தி. மு. க. இயக்கம் உருவாகியிருந்தால், அண்ணா இறந்தபோதே தி. மு. க. அழிந்திருக்குமே! ஆனால் எம். ஜி. ஆரினால் தற்பொழுது அமைக்கப்பட்டிருக்கும் கட்சியை நோக்கும் போது எம். ஜி. ஆரின் செல்வாக்கு ஒன்றைத் தவிர வேறு ஒன்றுமே தென்படவில்லை. தனிப்பட்ட மனிதர் ஒருவருக்காக உண்டாக்கப்பட்ட ஒரு கட்சி மக்கள் மத்தியில் நீடித்திருந்ததாக வரலாறு உண்டா? சினிமா ரசிகர்களை நம்பி அமைக்கப்பட்ட எம். ஜி. ஆரின் கட்சி எத்தனை நாட்களுக்கு நிலைத்திருக்கப்போகின்றது என்பது இன்னும் கேள்விக்குறியாகவே இருக்கிறது.

நாங்கள் கூட முன்பு எம். ஜி. ஆரின் மீது அளவற்ற பற்று வைத்திருந்தவர்கள் தான். ஆனால் என்றைக்கு அவர் தி. மு. க. வை விட்டு விலகினாரோ அன்றைக்கே அவர் மீது நாம் வைத்திருந்த பற்றும் சிறிதளவு குறைய ஆரம்பித்துவிட்டது. தி. மு. க. தொண்டர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளில் உண்மையிருந்தால் கட்சிக்குள்ளேயே அதனைக் கூறி கட்சியைத் தூய்மைப் படுத்தும் முயற்சியில் அவர் ஈடுபட்டிருக்கலாம். அப்படி நடந்திருந்தால் அவர் மீது நாம் வைத்திருந்த மதிப்பு ஒரு படி இன்னும் உயர்ந்திருக்கும். ஆனால் வருமான வரித் தொல்லைகளிலிருந்து மீளுவதற்காக; அவராகவே தி. மு. க. வை விட்டு விலக்கி வைக்கப்படும் ஒரு சூழ்நிலையை உருவாக்கினாரோ என்ற சந்தேகம் நமது மனதில் எழுகிறது. இதனால் அவருடைய கட்சிப்பற்றின் மீதே எமக்குச் சந்தேகம் எழ ஆரம்பித்து விட்டது. முன்பு தி. மு. க. கொள்கைகளின் மீது இவர் வைத்திருந்த பற்று உண்மையானதுதானா என்றும் எமக்குச் சந்தேகம் எழுகிறது. ம. பொ. சி.

(7-ம் பக்கம் பார்க்க)

## "சர்வாதிகாரி யெஹியாகானாக நீங்களும் மாறிவிடாதீர்கள்!"

### பிரதமருக்கு யாழ் மாவட்ட மக்கள் குழுத் தலைவர்கள் சங்க செயலாளர் கடிதம்!

யாழ் மாவட்ட மக்கள் குழுத் தலைவர்கள் சமாசத்தின் சார்பில் அதன் செயலாளர் திரு. ஆசிர்வாதம் கெனறி ஜெ. பி. பின்வரும் மகஜர் ஒன்றைப் பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

"இலங்கை குடியரசின் அரசியல் அமைப்புத் திட்டம் தமிழர்களின் அரசியல் பொருளாதார மத கலாச்சாரங்களுக்கும் தமிழ் மக்களின் சொந்த பிரதேசமான வட கிழக்கு மாகாணங்களில் சிங்கள மக்களின் குடியேற்றத்தை தடுப்பதற்கும் உரிய முறையில் புதிய அரசியல் சட்டத்தின் மூலம் பாதுகாப்பு அளிக்கப்படவில்லை. மாறாக தமிழர்களை இந்த நாட்டின் ஓர் அடிமை இனமாக, நாகரீகம் அற்ற சமூகமாக, இரண்டாந்தர பிரஜையாக, ஆளப்படும் மக்களாகவே கருதி தமிழ் மக்களைப் பற்றி எவ்வித குறிப்பும் இல்லாமல் சர்வமும் பௌத்த சிங்கள மயமாக இலங்கையை பிரகடனம் செய்தது இலங்கைக்கு கேடே அன்றி ஒரு சதவிதமும் நன்மை கிடையாது.

"தமிழர்களுக்கும் அவர்கள் தம் மொழி, பண்பாடு, கலை, கலாச்சாரங்களுக்கும் அவர்களின் சொந்த நிலத்துக்கும் பாதுகாப்பு அளிக்காத அரசமைப்பை தமிழர்கள் ஏற்றுக்கொள்ள எவ்வித நியாயமும் இல்லை, ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்கள்.

"மேற்படி, விடயங்களைக் குறிப்பிட்டு 26-8-72ல் கூடிய யாழ் மாவட்ட மக்கள் குழு தலைவர்கள் சமாசம் நிர்வாக சபைக் கூட்டத்தில் புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தை எதிர்த்து ஓர் தீர்மானம் நிறைவேற்றி 6-9-72ல் தங்களுக்கு அனுப்பி வைத்ததை தாங்கள் அறிவீர்கள். அது மட்டுமன்றி தமிழ் பிரதேசத்தில் உள்ள உள்ளூர் ஆட்சி மன்றங்களும் புதிய அரசியல் அமைப்பை எதிர்த்து தீர்மானங்கள் நிறைவேற்றி தங்களுக்கு அனுப்பி உள்ளார்கள். இத்தகைய தீர்மானங்கள் மூலம் தமிழ் மக்களின் அரசியல் நிலை அறிந்து அதற்கேற்றவாறு அரசியல் அமைப்புத் திட்டத்தில் இன்று வரையும் எதுவித திருத்தமும் செய்ய முன்வராது இருப்பது தமிழர்களின் பொறுமையை சோதிக்கிறீர்கள் என்றே தமிழ் மக்கள் கருதுகிறார்கள்.

"அரசமைப்புத் திட்டத்தின் மீது வெறுப்புக் கொண்டு அதனை முன்வைத்து தேர்தலில் போட்டியிட வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் சென்ற ஒக்டோபர் மாதம் 3ம் திகதி தமிழர் கூட்டு முன்னணித் தலைவரும் காங்கேசன்துறை பிரதிநிதியுமான திரு. செல்வநாயகம் அவர்கள் தமது அரசபேரவை உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்ததும் தமிழர் தமது பிரதேசங்களில் பூரண ஹர்த்தால் நடாத்தியும் எதிர்ப்புத் தெரிவித்திருப்பதை தாங்கள் நன்றாக அறிவீர்கள். இவற்றுக்கு தாங்கள் எவ்வித மதிப்பும் கொடுக்காமல் இருப்பது தமிழர்களை வேண்டுமென்றே அவமானப்படுத்துவதற்காக எனக் கருதப்படுகிறது.

"சென்ற 29ம் திகதி காங்கேசன் துறை தொகுதி இடைத் தேர்தலுக்கு நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்படும் தினமாக வர்த்தமானியில் வெளிவந்ததை திடீரென தங்கள் அரசாங்கம் இரத்துச் செய்து காலவரையின்றிப் பின் போட்டிருப்பதும் பின் போட்டதற்குரிய காரணங்களை சமீபத்தில் அரசபேரவை வரவுசெலவுதிட்ட விவாதத்தில் யாழ்ப்பாணப் பகுதி முழுவதும் ஒரே கலகம் நிறைந்த பிரதேசமாக இருக்கிறது. அங்கு சட்டங்களும் ஒழுங்குகளும் தலைகீழாகிவிட்டன என்னும் காரணமாக காங்கேசன் துறை இடைத்தேர்தலை பின் போட்டிருப்பதாகவும் தெரிவித்தீர்களே. தாங்கள் காட்டிய காரணங்களை யாழ்ப்பாணப் பகுதியில் இருந்து தங்கள் அரசாங்கத்தை ஆதரிக்கும் அரசபேரவை உறுப்பினர்களோ அல்லது தங்கள் அரசாங்கக் கட்சிகளான கொம்யூனிஸ்ட், லங்கா சமசமாசக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி யாழ்ப்பாணக் கிளைகளோ தங்கள் காரணங்களை சரியான காரணங்கள் என்று ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

"குருநகர் பகுதியில் ஏற்பட்டிருக்கும் சிறு காரணத் [illegible] கொண்டு அமைதியாக இருக்கும் காங்கேசன் துறைத் தொகுதியில் தேர்தல் நடாத்த முடியாது என்ற காரணம் சரியானதாக இல்லை.

"கிழக்கு பாகிஸ்தான் மக்களின் உரிமைக் கோரிக்கையை பார்த்து பாகிஸ்தான் முன்னாள் சர்வாதிகாரி யஹியாக்கான் போலிக் காரணங்களைக் கூறி கிழக்குப் பாகிஸ்தான் மக்களை அடக்கி ஒடுக்கி அவர்களின் சுதந்திர போராட்டத்தை முறியடிக்க முற்பட்டு கடைசியில் படுதோல்வி அடைந்ததுடன் பாகிஸ்தான் இரண்டுபட்டதற்கும் யஹியாக்கானே காரணமாக இருந்தான்.

"அதே போன்று தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கைகளை தாங்கள் செவிமடுக்காமல் தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாத காரணங்களை கூறுவதினால் தமிழ் மக்களின் சுதந்திர உணர்ச்சியை அடக்கி ஒடுக்கிவிட முடியாது. பாகிஸ்தான் இரண்டுபட்டது போல் இலங்கையும் இரண்டுபடுவதும் அதற்கு முழுப் பொறுப்பும் தாங்களே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதையும் எமது யாழ் மாவட்ட மக்கள் குழு தலைவர்கள் சமாசம் கூறிவைக்க விரும்புகிறது.

"அரச பேரவையில் தமிழர் கூட்டு முன்னணிப் பிரதிநிதிகளும் ஐக்கிய தேசியக் கட்சியின் கிழக்கு மாகாண முஸ்லீம் உறுப்பினரான ஜனாப் முஸ்தபா பா. உ. அவர்கள் சுட்டிக்காட்டியவற்றையும் தாங்கள் மனதில் எடுத்து தமிழ் மக்களையும் சகோதரர்களாக வாழ வைக்கவும் ஐக்கிய இலங்கையை கட்டி எழுப்பவும் காங்கேசன்துறைத் தொகுதி இடைத் தேர்தலை காலம் கடத்தாது உடனடியாக நடாத்த வேண்டுமென்றும் யாழ் மாவட்ட தமிழ் மக்கள் சார்பில் தங்களை கேட்டுக்கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. நா. சபைக்கு தமிழர் பிரச்சினை!

## எடுத்துச் செல்வதற்கு வழி காணப்பட வேண்டும்!

### அரச பேரவையில் தர்மலிங்கம்!

"ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச அடிப்படையில் மாத்திரம் சமாதானத்துக்கு உழைத்தால் போதாது. ஒவ்வொரு நாடும் அந்தந்த நாடுகளிலுள்ள பல்வேறு இன மக்களுக்கும் நீதி வழங்குகிறதா என்பதையும் கவனிக்கவேண்டும். அப்படிக் கண் காணித்திருந்தால் வங்கதேசப் போராட்டமே தோன்றியிருக்காது.

"ஒரு நாட்டிலே வாழுகின்ற சிறுபான்மை மக்களுடைய உரிமை மறுக்கப்படுகின்ற நேரத்தில் அச்சிறுபான்மை மக்கள் ஐ. நா. சபைக்கு தங்களுடைய பிரச்சினையை எடுத்துச்செல்வதற்கு ஒரு வழியை ஐ. நா. சபையே ஆக்கிக் கொடுக்கவேண்டும். இலங்கையில் உரிமை பறிக்கப்பட்டு மிகவும் கேவலமாக நடத்தப்படும் தமிழ் மக்கள் தங்கள் பிரச்சினையை ஐ. நா. சபைக்கு எடுத்துச்செல்ல ஏதாவது வழி காணப்படவேண்டும்."

—இவ்வாறு தேசிய அரசபேரவையில் பாதுகாப்பு அமைச்சுமானியம் மீது உரையாற்றிய உடுவில் பா. உ. திரு. தர்மலிங்கம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தமது பேச்சில் கூறியதாவது:-

முதலில் திரு. சுந்தரலிங்கத்தை இந்த நேரத்தில் யாழ்ப்பாணம் அனுப்பியதற்கு பிரதமருக்கு நன்றி.

திரு. ஜோர்ஜ் இராஜபக்ஸ:- யார் அவர்?

திரு. தரும:- பொலிஸ் சுப்பிரின்டன் திரு. சுந்தரலிங்கத்தைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன். இவர் அங்கு வந்தபின்னர்தான் குருநகர் குழப்பம் அடங்கியது. இவரை இன்னும் கொஞ்சக்காலத்துக்காவது தொடர்ந்து இங்கு வைத்திருக்கவேண்டும். இப்போது அங்கு அமைதி நிலவுகிறது.

"சந்தேக நபர்கள் மீது பொலிஸார் எடுக்கும் நடவடிக்கை பற்றி திரு. சூரியகுமாரன் விஷயத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இது பற்றி நான் பிரச்சினை எழுப்பியபோது பதில் அமைச்சர் பதில் அளிக்கையில், "திரு. சூரியகுமாரன் ரிவால்வர் வைத்திருந்தார். கைக்குண்டு தயாரிக்கும்போது பொலிஸார் அவரைக் கைதுசெய்ய எத்தனித்தனர். ஆனால் அவர் தப்பி ஓட முயன்றபோது பொலிஸார் பலாத்காரத்தைப்பாவிக்கவேண்டி ஏற்பட்டது" என்று சொன்னார்.

"ஆனால் உண்மை அதுவல்ல. அவர் ஜெகதீசன் என்ற வழக்கறிஞர் ஒருவர் மூலம் தானே சரணடைந்தார். இப்போது எனது கையில் ஒரு சத்தியக் கடதாசி இருக்கிறது. இது சூரியகுமாரனின் சத்தியக் கடதாசியாகும்.

"அந்தச் சத்தியக் கடதாசியில் திரு. சூரியகுமாரன் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்: "ஈ. எல். 6765 என்ற இலக்கக்காரில் சி. ஐ. டி. பொலிஸ் நடராசா, பண்டார ஆகியோர் யாழ். நீதிபதியின் வீட்டுக்கு என்னைக் கூட்டிக்கொண்டு போனார்கள். அங்கு நீதிபதியைச் சந்திக்கப் பொலிஸார் என்னை அனுமதிக்கவில்லை" என்றும் தெரிவித்துள்ளார்.

இனி நல்லூர்ப் பொலிசாரின் கொடுமை பற்றிக்கூற வேண்டியிருக்கிறது. சூரியகுமாரன் என்பவர் எ. ஜெகநீசன் என்ற வழக்கறிஞருடன்தான் பொலிஸில் சரண் புகச் சென்றார். பொலிஸில் சரணடையச் செல்பவர் எவரும் சுழல் துப்பாக்கியுடன் செல்வாரா? சரண் புகச் சென்றவரைத்தான் பொலிசார் நையப்புடைத்தனர். அது மாத்திரமல்ல திரு. அமிர்தலிங்கம், திரு. ஆலால



சுந்தரம் ஆகியவர்களை குழப்பங்களில் சம்பந்தப் படுத்தும்படியும் கோரினர். அதைத் தொடர்ந்து டாக்டர் பிலிப்ஸ் என்பவரிடம் கொண்டுசென்று காட்டினர். இவர் அரசாங்க டாக்டர் அல்ல. அரசாங்க டாக்டர் அல்லாத ஒருவரிடம் பொலிஸார் இப்படிக் கைதிகளை கொண்டுசெல்லலாமா? பண்டார, நடராசா என்ற இரு பொலிஸ்காரர்கள் ஈ. எல். 6765 என்ற காரில் சூரியகுமாரனை மாஜிஸ்டிரேட் முன்னர் ஆஜர்செய்வதற்காக கூட்டிச் சென்றனர். ஆனால் அங்கு சூரியகுமாரனை மாஜிஸ்ரேட் முன்னர் கொண்டுசெல்லாமல் தெருவில் விட்டு தாமே உள் சென்று விளக்கமறியல் உத்தரவைப் பெற்றுவந்தார்கள்.

#### "இளைஞர்களை விடுதலை செய்க"

சென்றவாரம் சூரியகுமாரனும் மற்றவர்களும் நீதிமன்றத்துக்கு கொண்டுவரப்பட்டபோது பார்த்தேன். மிகவும் நொந்துபோயிருக்கிறார்கள். மனிதாபிமானத்தின் பெயரில் இவர்களை விடுதலை செய்யும்படி [illegible] கிறேன். அவர்கள் [illegible] நாட்டைவிட்டு ஓடப்போகிறார்களா? எந்த நேரத்திலும் அவர்கள் மீது வழக்குத் தொடரலாமே, இதைப் போல காசி ஆனந்தனையும் ஆனந்தவிஜயகனையும் வெலிக்கடையில் வாட்டி வதைக்காமல் உடனடியாக விடுதலை செய்து விடவேண்டும். அவர்கள் மீது குற்றமிருக்குமானால் வழக்குத் தொடரும்படி கோருகிறேன்.

ஆகஸ்ட் 2ம் திகதி வவுனியாவிலுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் பறந்து கொண்டிருந்த உதய சூரியன் கொடியை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ராஜபக்ஸ பிடுங்கி தீவைத்து விட்டார். இவர் மீது வழக்குத்தொடரப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் ஏன் இந்த பொலிஸ் அதிகாரி இன்னும் பதவியிலிருந்து தற்காலிகமாக விலக்கப்படவில்லை.

திரு. பீலிக்ஸ் — என்ன கொடி?

திரு. தரும—தமிழர் கூட்டணியின் கொடிதான் அது.

இச்சபையின் முன்னாள் அங்கத்தவர்களில் ஒருவரான திரு. அமிர்தலிங்கம் வெளிநாடு செல்வதற்கான எக்ஸிட் விஸா கேட்டிருந்தார். ஆனால் இதுவரையும் அதுகொடுக்கப்படவில்லை.

திரு. ஜெயக்கொடி— இந்தியா செல்லவா?

திரு. தரும — இல்லை. சிங்கப்பூருக்குச் செல்வதற்காகத்தான் மனுச்செய்தார். அங்கு அவர் மாமனார் மரணமடைந்ததனால்தான் செல்வதற்கு மனுச்செய்தார்.

திரு. செல்வநாயகமும், திரு. அமிர்தலிங்கமும் இந்தியாவுக்குச் சென்றிருந்தது வைத்தியத்துக்காகவும், சத்திய சாயிபாபா தரிசனத்துக்காகவும்தான் அப்படிச் சென்றவர்களுக்கு சென்னை நகர கார்ப்பரேஷன் வரவேற்பளித்தது.

தென்னகத்தில் திரு. செல்வநாயகத்துக்கோ அல்லது திரு. திரு. அமிர்தலிங்கத்துக்கோ வரவேற்பளிப்பதில் குறை என்ன இருக்கிறது. அங்குசென்றவர்கள் [illegible] நாடு கார்ப்பரேஷன் திரு. செல்வநாயகத்துக்குபொது வரவேற்பு அளித்துக்கௌரவித்தது. இதில் என்ன தவறிருக்கிறது. எமது பிரதமரும், அமைச்சர்களும் வெளிநாடுகளுக்குச் சென்றால் வரவேற்பளிக்கப்படுவதில்லையா?

ஒரு குரல் — செல்வநாயகம் எப்போது பிரதமரானார்?

திரு. தரும:- அவர் தமிழ் மக்களின் தலைவர்.

பீலிக்ஸ்:- அவர் பிரதமராகும் வரை பொறுத்திருங்கள்!

நாம் ஆயுதம் கேட்கப் போனோமா இராணுவத்தைக் கேட்கப் போனோமா? வட வியட்நாம் பௌத்தர்களின் தூதுகோஷ்டியினர் இங்கு வரமுடியுமானால் தமிழர்களாகிய நாம் தமிழ்நாட்டிலுள்ளசகோதரர்களிடம் சென்று நமது குறைகளைக் கூறுவது முறையற்றதா?

திரு. அமிர்தலிங்கத்தின் 'எக்ஸிட் விஸா' மறுக்கப்பட்டது. ஜனநாயகத்துக்கு முரணானது. இந்தியா சென்ற திரு. அமிர்தலிங்கம் அங்கு வரவேற்பளிக்கப்பட்டபோது "திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா விரும்ப மாட்டார் என்று கூறி வரவேற்பை மறுத்திருக்க வேண்டுமா?

திரு. அமிர்தலிங்கத்துக்கு எக்ஸிட் விஸா மறுக்கப்பட்டிருப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச அடிப்படையில் மாத்திரம்சமாதானத்துக்கு உழைத்தால் போதாது. ஒவ்வொரு நாடும் அந்த நாட்டு மக்களுக்கு நீதிவழங்கப்படுகிறதாவென்பதைக் கண்காணித்திருந்தால் வங்காள தேச போராட்டம் நிகழ்ந்திருக்காது. உகண்டாவில் இருக்கிற பிரச்சினை எழுந்திருக்காது. ஒரு நாட்டிலே வாழுகின்ற சிறுபான்மை மக்களுடைய உரிமை மறுக்கப்படுகின்ற நேரத்திலே அச்சிறுபான்மை மக்களுடைய உரிமை மறுக்கப்படுகின்ற நேரத்திலே அச்சிறுபான்மை மக்கள் ஐ. நாவுக்கு தங்களுடைய குறைகளை எடுத்துக் கூறுவதற்கு ஒரு வழியை ஐ. நா. ஆக்கிக் கொடுக்க வேண்டும்.

டாக்டர் என். எம்;- முழு நாட்டையும் ஐ. நா. வுக்குக் கொடுத்துவிட வேண்டுமா? இது உள்நாட்டுப் பிரச்சினை.

திரு. தரும:- முழு நாட்டையும் கொடுக்க வேண்டாம். ஆனால் இங்கே நடைபெறுகிற குறைகளை ஐ. நா. விசாரிக்க வேண்டும்.

## வவுனியா பா. உ. முயற்சி வெற்றி!

இதுவரை காலமும் பிரசவ விடுதியாகவும், சிறு வைத்தியசாலையாகவும் மட்டும் இயங்கி வந்த நெடுங்கேணி வைத்தியசாலை இனி பத்து வயதுக்குட்பட்ட சிறுவர்களும், சகல பெண் நோயாளிகளும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுவர்.

இப்பகுதி நோயாளிகளின் கஷ்ட நிலைகளைப் பற்றி நெடுங்கேணி கிராம முன்னேற்றச் சங்கம் வவுனியா எம். பி. திரு. சே. மா. செல்லத்தம்பியிடம் புகார் செய்தது. இதன்படி வவுனியா எம். பி எடுத்த கடும் நடவடிக்கையின் படி இத்திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது.

## ஏன் சமாளிக்கிறீர்கள்?

சில காலத்துக்கு முன் பிரதமர் சிறிமாவோ யூ. என். பி. த் தலைவர் திரு. டட்லி சேனநாயகாவுக்கு ஒரு சவால் விடுத்திருந்தார்.

'உங்கள் பதவியை துறந்துவிட்டு தேர்தலுக்கு நின்றுபாருங்கள்; சென்ற தேர்தலில் நீங்கள் பெற்ற வாக்குகளைவிட கூடுதலாகப் பெற்றீர்கள் என்றால் இந்த அரசாங்கத்தை மக்கள் வெறுக்கிறார்கள் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன்.'

என்று தமது சவாலில் டட்லிக்கு அவர் கூறியிருந்தார்.

65 இலட்சம் சிங்கள பொதுமக்கள் அபிப்பிராயத்தை டெடிகமைத் தொகுதியில் டட்லிக்கு கிடைக்கும் வாக்குகளை மட்டுமே கொண்டு அளப்பதற்கு பிரதமர் அப்போது தயாராக இருந்தார்.

இதேபோல, தந்தை செல்வா அவர்கள் தமது பா. உ. பதவியைத் துறந்து—புதிய அரசியல் சட்டம்பற்றி தமிழ்மக்கள் கொண்டுள்ள அபிப்பிராயத்தை அறிவதற்கு என்னுடன் போட்டியிட்டு பாருங்கள் என்று அரசுக்கு சவால் விடுத்திருக்கிறார்—

65 இலட்சம் சிங்கள பொதுமக்களின் அபிப்பிராயத்தை அறிவதற்கு பிரதமர் எந்த அளவு கோலைப் பயன்படுத்த நினைத்தாரோ அதே மாதிரியான அளவுகோலையே 26 இலட்சம் தமிழ்மக்களின் அபிப்பிராயத்தை அறிவதற்கு தந்தை செல்வாவும் பயன்படுத்த முனைந்துள்ளார்.

ஆனால்—

அன்று பிரதமரின் சவாலை கைதட்டி வரவேற்ற டாக்டர்என். எம். பெரேரா இன்று செல்வாவின் சவாலை மட்டும் ஏற்றிட அஞ்சுகிறார்.

"தமிழ் மக்களின் அபிப்பிராயத்தை அறிவதற்கு காங்கேசன்துறையில் மாத்திரம் எப்படிப் பரீட்சித்துப்பார்ப்பது?" என்று கேட்கிறார் டாக்டர்.

பிரதமர், டட்லிக்கு விடுத்த சவால் சரியானதுஎன்றால் தந்தை செல்வா இன்று சிங்கள அரசுக்கு விடுத்துள்ள சவாலும் நியாயமானதுதானே!

அதற்கொரு நியாயம்— இதற்கு மற்றோர் நியாயமா?

சவாலை ஏற்க உங்களுக்கு தெம்பில்லை—திராணியில்லை—முதுகெலும்பில்லையென்பதை ஒப்புக்கொள்வதை விடுத்து எதற்காக சமாளிக்க முயலுகிறீர்கள்?

—எஸ். ஆர். எம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# காணி அமைச்சரின் அலறல்!

'ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினர் — அமைச்சர்களும், அரை அமைச்சர்களும் மற்றும் ஆளுங்கட்சி உறுப்பினர்களும்—அடிக்கடி மேடைகளிலும் தேசிய பேரவையிலும் வகுப்புவாதம், இனவெறி என்பவற்றை கடுமையாக கண்டித்துப் பேசுவதையும் கேட்டுவருகிறோம்.

அதே நேரத்தில் இனவெறி, வகுப்புவாதம் என்பனவற்றை சொல்லிலும் செயலிலும் அச்சொட்டாகக் கடைப்பிடித்து வருபவர்களும் அவர்களாகவேயிருக்கிறார்கள். அதையும் நாட்டு மக்கள் கவனித்துக் கொண்டே வருகிறார்கள்.

நாடு என்றால் சிங்கள நாடு, மக்கள் என்றால் சிங்கள மக்கள், 'தேசியம்' என்றால் சிங்களத் தேசியம், மதம் என்றால் பௌத்தமதம்—இப்படித்தான் ஆளுங்கட்சியினரின் கண்களுக்குத் தெரிகிறதே தவிர—தனக்கென தனியான பிரதேசமும், தனியான கலை கலாசாரமும் பழம் பெரும் வரலாற்றுப் பெருமை மிக்க மொழியும் உள்ள தேசிய இனம் என்றோர் இனமும் இந்நாட்டில் வாழ்கிறது என்ற உண்மையை அவர்கள் அடிக்கடி மறந்து விடுகிறார்கள்.

இந்நாட்டின் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா, தாம் நாடு முழுவதற்கும் பொதுவானவர் என்பதையும் மறந்து—ஆட்சிக் கட்டிலில் ஏறியதும் முதன்முதலாக சிங்கள மக்களின் நல உரிமைகளைப் பாதுகாத்திட உழைப்பேன் என்று உறுதியெடுத்தார்.

இந்த அரசாங்கத்தின் முதலாவது நீதியமைச்சராக இருந்தவரோ, தாம் சகலருக்கும் நீதிவழங்க வேண்டியவர் என்பதையும் மறந்து, 'வடக்கு, கிழக்கில வாழும் தமிழர்கள் வந்தேறுகுடிகள்—படை நடத்தி வந்தவர்களின் பரம்பரையினர் அவர்களுக்கு எந்தச் சலுகையும் தரச் சிங்களவர்கள் தயாராக இல்லை' என்று முதலையிலே இனவெறியைக் கக்கினார்.

தமிழுக்கு அற்ப சொற்ப சலுகைகள் தரப்படுவதைக் கூட எதிர்த்த இனவெறியன் தமிழ் பகைவன்—இரத்தின சாரா தேரோவுக்கு அரசாங்க செலவில் நினைவுச் சின்னம் நிறுவி, அந்நினைவுச் சின்னத்தைத் திறந்து வைத்தனர் ஆளுங்கட்சியின் முப்பெரும் தலைவர்களான சிறிமா பண்டாரநாயகா, டாக்டர் என். எம். பெரேரா, பீட்டர் கெனமன் ஆகியோர்!

தமிழர்களின் ஆதிக்கத்தை முறியடிக்க துட்ட கைமுனு போல முன்வரவேண்டும்—நாடாளுமன்றத்திலேயே வகுப்புவெறியைக்கக்கினார் ஆளுங்கட்சி உறுப்பினர்களில் ஒருவரான திரு. உனந்தென்ன என்பவர்!

வெள்ளைச்சாமிக்கும், கருப்பையாவுக்கும் நிலம் தரமாட்டோம், சிங்களவர்களுக்கு மட்டுமே நிலம் தருவோம் —என்று தேசிய பேரவையிலேயே பேசிக்காட்டினார் ஆளுங்கட்சி உறுப்பினரான திரு. விஜயசுந்தர அவர்கள்!

இந்த அரசு பதவிக்கு வந்த நாள் முதல் தமிழர்களுக்கு எதிராக எப்படி துவேஷத்தை தூண்டி வந்துள்ளதென்பதற்கு ஒரு சில சாம்பிள்களே மேலே தரப்பட்டிருப்பவை.

வாயளவில் நிலைமை இதுவென்றால் — செயலளவில் இந்த அரசு காட்டிய —காட்டிவரும் — பாரபட்சங்களும் பின்பற்றிய — பின்பற்றிவரும் — இனவெறிக்கொள்கைகளும் தமிழ் மக்கள் அறிந்தவைகள்தாம்.

தந்தை செல்வாவின் தலைமையின் கீழ், தமிழர் கூட்டணியில் தொழிலாளர் திலகம் தொண்டமான் அவர்களும் சேர்ந்து நின்று இன்று குரல் கொடுப்பது தமிழர்களுக்கு பேரெழுச்சியை யூட்டும் அதே நேரத்தில் தமிழர்களின் எதிரிகளுக்கு அச்சத்தையும் கிலியையும் மூட்டிவிட்டிருக்கிறது.

தொண்டமான்—செல்வாவின் உறவு ஆளுங்கட்சியினருக்கும் அச்சத்தை யூட்டியுள்ளதென்பதை அண்மையில் காணியமைச்சர் கொப்பேகடுவ பேசிய பேச்சிலிருந்து தெளிவாகப்புரிகிறது.

''திரு. தொண்டமான், செல்வா குழுவினரோடு சேர்ந்து கொண்டு, அரசுக்கு எதிராக இயங்கி வருகிறார். இது நாட்டுக்கு நல்லதல்ல. மலைநாட்டு பிரதேசங்களை, வடக்கு கிழக்கு மாகாணங்களுடன் இணைத்து சமஷ்டி ஆட்சியமைப்பு ஏற்படுத்த முயலும் இக்கும்பலின் நடவடிக்கைகளை சிங்கள மக்கள் கட்சி பேதமின்றி எதிர்க்கவேண்டும்.''

என்று கூறியிருக்கிறார் காணி அமைச்சர். அதாவது சிங்கள மக்களை தூண்டிவிடும் இனவெறிப் பேச்சை நிகழ்த்தியிருக்கிறார். இன்றைய ஆட்சியினர் நெடுங்காலமாக செய்துவரும் வகுப்புவாத விளையாட்டை அடியொற்றி வகுப்புவாதப் பல்லவியைப்பாடியிருக்கிறார் அமைச்சர் கொப்பேகடுவ.

தொண்டமானும் ஒரு தமிழர்; தந்தை செல்வாவும் ஒரு தமிழர். எனவே தமிழரும் தமிழரும் இணைவதையோ தமிழர் கட்சிகள் கூட்டணி அமைப்பதையோ, அரசை எதிர்ப்பதையோ, சுதந்திரத்துக்கு போராடுவதையோ விமர்சிக்கவோ, கண்டிக்கவோ, காணியமைச்சருக்கும் சரி வேறு எவருக்கும் சரி உரிமையில்லை என்பதே நமது கருத்தாகும்.

**ஆட்சியினர் காட்டும் எந்தப்பூச்சாண்டிக்கும் தந்தை செல்வாவோ, தலைவர் தொண்டமானோ என்றும் அஞ்சியவர்களுமல்ல —இனி அஞ்சப்போகிறவர்களுமல்ல. இந்த ஆட்சியல்ல — சிங்கள மக்கள் மட்டும் அல்ல—இந்த உலகமே எதிர்த்தாலும் வடக்கும் கிழக்கும் மலையகமும் இணைந்தது இணைந்ததுதான் — தலைவர் தொண்டமானும், தந்தைசெல்வாவும் சேர்ந்தது சேர்ந்ததுதான்! இந்த இணைப்பை—பிணைப்பை—உறவை அறுத்தெறியக் கூடிய சக்தி யாருக்கும் கிடையாது!**

ஏனெனில், மொழி வழியால்—இன வழியால்—இரத்த பாசத்தால்—சுதந்திர உணர்வால் இயல்பாக ஒருமைப்பாட்டால் ஏற்பட்ட உறவு இது!

# 'அரசு மீது தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர்!

## இரண்டாந்தர நிலையிலிருந்து கொண்டு. ஒத்துழைப்புத் தருவது முடியாத காரியம்!

## பதவியல்ல உரிமையே எமக்குப் பெரிது'

### தேசிய அரச பேரவையில் செல்லத்தம்பு பேச்சு!

'தபாலமைச்சர் குமாரசூரியரையடுத்து இச் சபையில் பேசும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். இந்தச் சபையில் அவரது பேச்சு சுருதி குறைந்து காணப்பட்டது குறித்து மெத்த ஆச்சரியமடைந்தேன்.

இச்சபையில் மட்டுநகர் முதல்வர் நிகழ்த்திய உரை பற்றி தபாலமைச்சர் இங்கு குறிப்பிட்டது குறித்து நன்றி கூறுகிறேன். மட்டுநகர் முதல்வரின் பேச்சு சபையின் இருபகுதியினரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்திய தாக அவர் குறிப்பிட்டார்.

தபாலமைச்சர் இதுவரை அறியாவிட்டால், அவருக்கு கூற விரும்புகிறேன்—மட்டுநகர் முதல்வர் இச் சபையில் வெளியிட்ட கருத்துக்கள் தமிழர் கூட்டணி பின்பற்றும் கொள்கைகளேயாகும். தமிழர் கூட்டணியைச் சேர்ந்த நாங்கள் இந்த நாட்டில் ஐக்கியமும் சமாதானமும் ஏற்படுவதையே விரும்புகிறோம். ஆனல் அந்த ஐக்கியமும், சமாதானமும் கண்ணியம், கௌரவம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம்.

ஆனலும், முன்னர் முதலையில் நியமிக்கப்பட்டிருந்த ஒரு அமைச்சரைப் பற்றி குறிப்பிட்டு, அவர் எங்கள் கட்சியைச்சேர்ந்தவராக இருந்ததால் எங்களுக்கு பிடித்தமானவராக இருந்தார் என்று தபாலமைச்சர் இங்கு குறிப்பிட்டது வருத்தமளிப்பதாக உள்ளது.

1965ம் ஆண்டு அமைச்சரவை உருவாக்கப்பட்ட போது அன்றிருந்த சூழ்நிலையை தபால் அமைச்சர் அறியார் போலும். அந்த நேரத்தில் திரு. திருச்செல்வம் தமது சொந்த எண்ணப்படி நியமன அமைச்சராக முன்வரவில்லை. ஐக்கிய தேசிய கட்சியுடன் நாங்கள் ஓர் உடன்பாட்டுக்கு வந்து அந்தக்கட்சி ஆட்சியமைக்க உதவியளித்தது உண்மை. ஆனலும் எந்த ஒரு தெரிவு செய்யப்பட்ட தமிழரசுக் கட்சியைச்சேர்ந்த உறுப்பினரும் அச்சமயத்தில் அமைச்சர் பதவியை ஏற்க தயாராக இருக்கவில்லை. அதனல், திரு. திருச்செல்வம் தனது வழக்குரைஞர் தொழிலால் கிடைத்து வந்த பெரும் வருமானத்தையும் இழந்து, தமிழரசுக் கட்சியின் கட்டளைப்படி நியமன உறுப்பினராகி அமைச்சர் பதவியை ஏற்றார்.

தனக்கு இப்போதைய வேலை பிடிக்கவில்லையென்றும், அதில் களைப்பும் அலுப்பும் தட்டிவிட்டதாகவும், தமது பழையவேலையான கட்டட பொறியியல் வேலைக்கே போய் விடயோசிப்பதாகவும் தபாலமைச்சர் இங்கு கூறியது எனக்கு ஆச்சரியத்தைத்தரவில்லை. இரண்டாவது காதலில் சலிப்புத்தட்டும் போது முதல் காதலைப்பற்றி நினைப்பது வழக்கம்தான்!

ஆனல் முதல் காதலைப்

தபாலமைச்சர் சிந்திக்கிறார் என்பதைப் பற்றியே நான் கவலையுடன் எண்ணிப் பார்க்கிறேன். முதலை ஒழிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அல்ல — அல்லது இச் சபையில் முதலாவது தமிழ்



நியமன அமைச்சராகி புதிய சரித்திரத்தைப் படைக்க வேளையிலும் அல்ல — காங்கேசன்துறை இடைத்தேர்தலே இதற்குக்காரணமோ என்று நான் யோசிக்கிறேன்.

மைத்திரிபால:- ''அது சரியானது அல்லது — எம். சி. சுப்பிரமணியமே இச் சபையின் முதலாவது தமிழ் நியமன உறுப்பினர்!

செல்லத்தம்பு:- நான் குறிப்பிடுவது நியமிக்கப் பட்ட தமிழ் அமைச்சரைப் பற்றித்தான்; அதாவது மக்களின் வாக்குகளைப்பெருமல் இச்சபையில் அமைச்சராகி புதிய சரித்திரத்தை உண்டாக்கியவர்.

மைத்திரிபால:- அவரைப் பற்றி நீங்கள் பெருமையடையவேண்டும்!

செல்லத்தம்பு:- மக்கள் வாக்குகளின் மூலமாக இச் சபைக்கு வாராத மந்திரிகளைப்பற்றி நாங்கள் பெருமைப்பட முடியாது!

ஓர்:- உறுப்பினர் திருச் செல்வம் பற்றி என்ன கூறுகிறீர்கள்?

செல்லத்தம்பு:- இச்சபைக்கு மக்களின் வாக்குகளைப் பெருமல் வந்த முதலாவது தமிழ் அமைச்சரைப் பற்றியே நான் இப்போது பேசுகிறேன். தன்னுடைய முந்திய தொழிலுக்கு செல்லும் அவரது கருத்து — வரவிருக்கும் காங்கேசன் துறை இடைத்தேர்தலை ஒட்டி வந்ததா? அல்லது வடபகுதியில் நடைபெறவிருக்கும் எந்தவொரு இடைத்தேர்தலிலாவது தம்மால் போட்டியிட்டு வெற்றிபெற முடியாது என்பதை உணர்ந்ததால் ஏற்பட்ட அச்சமா காரணம் என்று நான் ஆலோசிக்கிறேன். (குறுக்கிடுகள்)

தபாலமைச்சருக்கு தனது பழைய காதலுக்கு போவதற்கு உரிமையுண்டு. எங்களுக்கு அதுபற்றிக் கவலை இல்லை. ஆனல் அவர் கூறிய ஒரு ஆலோசனையைத்தான் எங்களால் நிறைவேற்ற முடியாதென்பதை வருத்தத்துடன் கூறுகிறேன். தான் போனபின் நாங்கள்—அதாவது தமிழர் கூட்டணியினர் — சபையின் அந்தப் பக்கத்துக்கு தன்னுடைய இடத்தை எடுத்துக் கொள்

(7-ம் பக்கம் பார்க்க)



## புளுகர் பொன்னையாவைப் பார்க்க ஜன சமுத்திரம் திரண்டது!

கடந்த ஞாயிற்றுக்கிழமை சரஸ்வதி மண்டபத்தில் 'புளுகர் பொன்னையா' நாடகம் மேடையேறிய போது இதுவரை சரித்திரம் காணத ஜனத்திரள் கூடியது. மண்டபம் நிரம்பி வழிந்தது மக்கள் வெள்ளம். பலர் டிக்கட் இன்றித் திரும்பி விடு செல்ல வேண்டியேற்பட்டது. இவர்களது ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்காகக் கொழும்பு யாழ் கலை அரங்கத்தினர் மீண்டும் 23ம் திகதியும் 24ம் திகதியும் சரஸ்வதி மண்டபத்தில் 'புளுகர் பொன்னையா'வை மேடையேற்றவிருக்கின்றனர்.

பிரவுன்சன் இண்டஸ்றிஸ் ஆதரவில் பல மாதங்களாக வானெலியில் ஒலிபரப்பாகி பல லட்சக்கணக்கான இரசிகர்களைத் தேடிக்கொண்ட புளுகர் பொன்னையா மேடையேறியும் ஒரு சாதனையை நிலைநாட்டி விட்டார். வேலணை வீரசிங்கம் தயாரித்த இந்த நாடகத்தை வெள்ளிவிழாக் கலைஞர் வரணியூரன் எழுதி நெறிப்படுத்தியுள்ளார். விரைவில் இலங்கையின் பல பாகங்களிலும் புளுகர் பொன்னையா மேடையேறவிருக்கிறது. நாடகத்தில் வரும் ஒரு சுவையான காட்சியையே படத்தில் காண்கிறீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலும்புத் துண்டுக்காகக் காத்திருக்கும் நாயின் கதை!

## தேசிய அரசுப் பேரவையில் எடுத்துரைத்தார் ஜெயக்கொடி!



## வட்டுக்கோட்டைத் தியாகராசாவுக்கு உடுப்பிட்டி பா. உ. சுடச்சுடப் பதில்!

'சாதாரணமாக வரவு செலவுத் திட்டம் பற்றிப் பேசும் பொழுது என்னைப் பொறுத்த அளவில் வேறு குறிப்பான விஷயங்களை நான் பேசுவது வழங்கம் சற்று நேரத்துக்கு முன் கௌரவ வட்டுக்கோட்டைப் பிரதிநிதி (திரு. ஏ. தியாகராஜா) இங்கே பேசியதைக் கேட்டுக்கொண்டிருந்தபடியால் அவர் பேசிய விஷயங்களைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

கௌரவ வட்டுக்கோட்டைப் பிரதிநிதி அவர்கள் தம்முடைய தொகுதியிலோ அல்லது வட பகுதியிலோ ஒரு கூட்டம் போட்டு அங்கே இவ்விஷயங்களைச் சொல்லத் துணிவு இல்லாமல் இச் சபைக் கட்டடத்தின் பாதுகாப்புக்குள்ளே இருந்து அங்கே பேச முடியாதவற்றை இங்கே பேசுவதைக் கேட்கும் பொழுது மன வருத்தமாக இருக்கிறது.

### வீட்டுப் பிரச்சினை

ஒரு வீட்டுப் பிள்ளைகள் தம்முடைய சண்டை சச்சரவுகளை வீட்டினுள் வைத்துக் கொள்ளலாம். இங்கே உண்மையாக வரவு செலவுத் திட்டம் பற்றிய எங்களுடைய அபிப்பிராயத்தைக் கூற வேண்டியதுதான் விசேஷமாக இந்த வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்களில் எங்களிடையே அபிப்பிராயங்களை நிதி அமைச்சருக்கு கூற வேண்டுமேயல்லாமல் எங்களுடைய பிரச்சினைகளை இங்கே எடுத்து அவர் தமிழரசுக் கட்சியைத் திட்டுவதும் நாங்கள் அவரைத் திட்டுவதும் அழகல்ல. அதற்கு இது இடமும் அல்ல.

அவர் அனுபவம் உள்ளவராக இருந்திருந்தால், பண்புடையவராக இருந்திருந்தால், கௌரவமானவராக இருந்திருந்தால் அவற்றை இங்கே பேசியிருக்க மாட்டார். அவர் பேசியதைக் கேட்டுக்கொண்டிருந்தபொழுது எனக்கு என்னுடைய வீட்டு ஞாபகம் தான் வந்தது.

### நாயின் கதை

வீட்டில் நாங்கள் சாப்பிடும் பொழுது மேசையின் கீழ் நாய் ஒன்று நிற்பது உண்டு. எதற்காக அது நிற்பது என்றால், யாராவது சாப்பிடும் பொழுது எலும்புத் துண்டுகள் விழும் என்பதற்காகத்தான். ஆனால், நாங்கள் வீட்டிலே இறைச்சி சாப்பிடுவது இல்லை. சைவ உணவு சாப்பிடுகிறவர்கள். அப்பொழுது முருங்கைக் காய்த் துண்டுகள் தான் கீழே விழும் அதை எடுத்துக் கொண்டு அந்த நாய் வெளியே போய் நின்று நன்றாகச் சப்பும். அப்படிச் சப்பிக் கொண்டிருக்கும் பொழுது வேறு ஒரு நாயும் வந்து அதனுடன் சேர்ந்து கொள்ளும்.

அது போல் அரசாங்கத்திலிருந்து ஏதும் சில சலுகைகள் கிடைக்கும் என்று அரசாங்கத்துக்கு வக்காலத்து வாங்கி, அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுத்துக் கொண்டு, தாம் எந்த அடிப்படையில் எந்தக் கொள்கையோடு தேர்தலில் நின்று இந்தச் சபை உறுப்பினராக வந்தார் என்பதை மறந்துவிட்டு, தமிழரசுக் கட்சியினர் தமிழ் மக்களை ஏமாற்றி விட்டார்கள் என்று அவர் துணிவாகக் கூறினார்.

அவர் சார்ந்து நின்ற கட்சி அவரை கட்சியிலிருந்து விலக்கி விட்டது. அப்பொழுது அவருடைய கொள்கை எதுவாக இருந்தது? இப்பொழுது எங்களுக்குப் புத்தி சொல்கிறார்: 'மொழிப் பிரச்சினையில் அரசாங்கம் நீதியாக நடந்து விட்டது; அதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்; அரசியல் சாசனத்தில் மொழி உரிமையைச் சேர்ப்பது அவசியம் இல்லை; நடைமுறையில் என்ன செய்கிறார்கள் என்பதைப் பார்ப்போம்' என்று வட்டுக்கோட்டைப் பிரதிநிதி இச் சபையிலே துணிவாகக் கூறுகிறார்.

ஆனால், தேர்தலின் போது அவர் சார்ந்துநின்ற தமிழ்க் காங்கிரஸ் கட்சி அவரைக் கட்சியிலிருந்து நீக்கி விட்டது. தமிழரசுக் கட்சியினர் ஏமாற்றுவதைப் பற்றி காங்கேசன்துறைத்தொகுதி மக்கள் கூடியவிரைவில் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிப்பார்கள் என்று அவர் இங்கு துணிவாகக் கூறினார்.

எங்கோ தூரத்திலுள்ள ஒரு மலை நாட்டுத் தமிழன் விட்ட சவாலை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தாம் தேர்தலுக்கு நின்ற கட்சியே தம்மை நீக்கியபோது திரும்பவும் தேர்தலுக்குப் போகத்தக்க துணிவு இல்லாத அவர் இங்கு வந்து பேசுவது, ஒரு சகோதரன் என்ற முறையில் எனக்கு மிகவும் வெட்கமாக இருக்கின்றது. அவரைப் பற்றி நான் அதிகம் இங்கு பேச விரும்பவில்லை.

### வருத்தம்

சிங்கள மக்களும் தமிழ் மக்களும் இரு சகோதரர்கள். இளைய சகோதரனை மூத்த சகோதரன் அழைத்து "தம்பி இங்கே வா, உன்னுடைய குறைகள் என்னவென்று சொல்" என்று கேட்பது போல, அரசாங்கம் தாராள மனப்பான்மையுடன் அவர்களுடைய பிரச்சினைகளை அறிந்து தீர்க்க யோசிக்க வேண்டும்.

கடந்த ஆண்டு இருந்ததிலும் பார்க்க இந்த ஆண்டு அரசாங்கக் கட்சியினர் ஓரளவு மாற்றம் அடைந்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இந்த வரவு செலவு திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய எவராவது அப்படியாக சிறுபான்மையினருடைய பிரச்சினை என்று ஒன்று இல்லை என்று கூறியதில்லை. அப்படி ஒரு பிரச்சினை இருக்கிறது; அதைத் தீர்க்க வேண்டும் என்றுதான் பேசியிருக்கிறார்கள்.

ஆனால், அவற்றுக்கெல்லாம் மாறாக வடபகுதியிலிருந்து இந்தச் சபைக்குத் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட வட்டுக்கோட்டைப் பிரதிநிதி மாத்திரம் புற நடையாக இருக்கிறார். அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த சிங்கள [illegible] கள் இந்தப் பிரச்சினை[illegible] தீர்க்கவேண்டும் என்று சொல்லும் பொழுது வட்டுக்கோட்டைப் பிரதிநிதி மாத்திரம் அவை எல்லாம் தீர்ந்துவிட்டதாக நினைத்துக்கொண்டு இந்தச்சபையிலே பேசியதை நினைக்கும் பொழுது மிகவும் மனவருத்தமாக இருக்கிறது.

அவர் பாஷைப் பிரச்சினை தீர்ந்துவிட்டது என்று சொன்னார். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலும் பார்க்க நீதிமன்ற நிருவாக மொழி விடயத்தில் முன்னேறி இருக்கின்றோம் என்றும் சொன்னார். பாஷைப் பிரச்சினை பற்றி அரசியல் சாசனத்தைத் திருத்தத் தேவையில்லை என்றார். அவர் சொன்ன இவ்வளவையும் மிக்க மனவருத்தத்துடன் கேட்க வேண்டி இருக்கின்றது.

ஒரு காலத்தில் தனி இராச்சியம் அமைக்க வேண்டுமென்றும் நாட்டை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்றும் புத்தகம் எழுதி வெளியிட்ட அவர் இன்று என்ன சொல்கிறார் என்றால் இந்தப் பிரச்சினைகள் எல்லாவற்றையும் மறந்து அரசாங்கத்துடன் ஒன்று சேர்ந்து வாழ வேண்டுமென்று சொல்கிறார். அதற்கு நாங்களும் ஆயத்தம்.

### சம உரிமை கொடு!

முதலில் எங்களுக்குள்ள சம உரிமைகள் கொடுக்கப்பட வேண்டும். எமது மொழிக்குள்ள அந்தஸ்தைக் கொடுங்கள் அதன் பிறகு நாங்கள் ஒத்துழைக்க ஆயத்தம் என்றுதான் சொல்கிறோம்; சிறுசிறு சலுகைகளுக்காக ஒரு சில மாற்றங்களைப் பெறுவதற்காக அல்லது ஒரு தமிழருக்கு அமைச்சர் பதவி கிடைக்கவேண்டுமென்பதற்காக எமது அடிப்படை உரிமைகளை விட்டுக்கொடுக்க நாம் தயாராக இல்லை. பட்டினி கிடந்தாலும் எங்களால் உரிமைகளை விட்டுக் கொடுக்க முடியாது. நாம் அரசாங்கத்திடம் கேட்பது எமது பிரச்சினைகளை ஆராயுங்கள் என்பதுதான். எமது பிரச்சினைகளை நீங்கள் வளர விட்டுக்கொண்டுபோனால் நீங்கள் எங்களைப் புறம்பாகப் போங்கள் என்று தான் வழி வகுக்கிறீர்கள் என்று எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.

### தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது ஏன்?

நேற்று காங்கேசன் துறைத் தேர்தலை ஒத்திப் போட்டது பற்றிக் கேட்ட ஒரு கேள்விக்கு மறுமொழி கொடுத்த பிரதி அமைச்சர் ஒருவர் அதற்கான காரணத்தை இந்தச் சபையிலே கூறினார். அந்தக் காரணம் ஒரு சாக்குப் போக்கு என்று தான் சொல்ல வேண்டி இருக்கிறது. இன்று இலங்கையின் எந்தப் பகுதியிலும் பார்க்க யாழ்ப்பாணம்தான் மிகவும் அமைதியாக இருக்கிறது. அவ்விதம் அமைதியாக இருக்கும் இடத்திலே தேர்தலை வைப்பதால் எந்தவித அசம்பாவிதமும் நடக்காது. சிறிது காலத்துக்கு முன் ஏற்பட்ட சிறுசிறு அசம்பாவிதங்களை வைத்துக்கொண்டு காங்கேசன்துறைத் தொகுதிக்கு ஜனநாயக முறையில் பிரதிநிதி ஒருவரைத் தெரிவு செய்ய இடமளிக்காமல் இருப்பது வருத்தத்துக்குரியது.

இந்த அரசாங்கத்திற்கென இலங்கையின் பல பாகங்களிலும் இரகசியப் பொலிஸ் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கடந்த எத்தனை [illegible]ங்களில் எத்தனை எறிகுண்டுகளைக் கண்டுபிடித்தார்கள் என்று அறிய நான் ஆசைப்படுகிறேன்.

கொழும்புக் கோடு ஒன்றில் விளக்க மறியலில் இருந்த ஒரு கைதியை கைக்குண்டு எறிந்து கொல்ல முடியுமென்றால், கொழும்பில் ஆபத்தான நிலை இருக்கின்றதா அல்லது யாழ்ப்பாணத்தில் ஆபத்தான நிலையிருக்கின்றதா என்று நான் கேட்கின்றேன்.

கொழும்பிலிருந்து பொலனறுவைக்கூடாக உல்லாசப் பிரயாணிகள் பிரயாணம் செய்கின்றபொழுது, துப்பாக்கி முனையில் அவர்களை இடைமறித்து கொலைசெய்யவும் பொருள்களைச் சூறையாடவும் கூடிய ஒரு நிலையிருக்கின்றதென்றால் அந்தப் பகுதிகளில் அசம்பாவிதமான நிலையிருக்கின்றதா அல்லது அப்படிப்பட்ட அசம்பாவிதங்களில்லாத யாழ்ப்பாணத்தில் அசம்பாவிதங்கள் நடக்கின்றனவா என்று கேட்க விரும்புகிறேன்.

ஆகவே இந்த நியாயத்தை—சிறிதேனும் பொருத்தமில்லாத நியாயத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. எவருமே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். நேற்று நிதியமைச்சரவர்கள் தெரிவித்த காரணமொன்றைக் கொண்டு இதில் உள்ளக்கிடக்கையொன்று இருக்கிறதென்பது எங்களுக்குப் புலனாகின்றது.

"நீங்கள் எல்லோரும் இராஜினாமாச் செய்துவிட்டால் அதன் பின்னர் நாங்கள் உபதேர்தல்களை நடாத்துவது மிகச் சுகமாக இருக்கும்" என்று நிதி அமைச்சரவர்கள் நேற்றுக் காரணமொன்றைச் சொன்னார்கள். தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டு — இரு உறுப்பினர்கள் தவிர்ந்த ஏனைய எல்லோரும் நாங்கள் தமிழ் மக்களின் உரிமைகளைக் கோருவதற்காக இங்கு இருக்கின்றோம். இந்தச் சபையில் நாம் இல்லாமற் போகவேண்டுமென்று நீங்கள் விரும்பினால் அப்படிச் செய்யுங்கள். அப்படிச் செய்தால் கடைசி முடிவு நாடு இரண்டாகப் பிரிவதுதான்.

கலாநிதி என். எம். பெரேரா அவர்கள் எதிர்க்கட்சியிலே இருக்கின்ற பொழுது சொன்னார், "one Language, two nations; two languages one nation" என்று அவர் கூறியது ஹன்சார்ட் புத்தகத்திலே இருக்கின்றது. எந்தப் பக்கத்திலே என்று என்னால் தற்பொழுது குறிப்பிட முடியவில்லை. நீங்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளை இச் சபையிலே இருக்கவிடாது இந்நாடு தனியொரு நாடு—தனியொரு மக்கள் என்று வைத்தால் நாடு பிரிவதைத் தடுக்க முடியாதென்பதை மிகக் கவலையோடு கூறி எனது உரையை முடிக்கின்றேன். (23-11-72 ஆற்றிய உரையின் ஓர் பகுதி).

## தூய தமிழ்

"எங்கு தூயதமிழைப் பெற்றுக்கொள்வது என்பது எனக்கு விளங்கவில்லை—இது என்ன தமிழ்? எங்கு இந்தத் தமிழைப் பெறுவது? எங்கேயிருக்கிறது?"

—இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவையில் தூயதமிழ் பயன்படுத்தப்படுவதில்லையென்று தேசிய அரச பேரவையில் நம்மவர்கள் குற்றம் சுமத்தியபோது மேற்கண்டவாறுகப் பதிலளித்திருக்கிறார் ஒலிபரப்புத்துறை அமைச்சர் ஆர். எஸ். பெரேரா.

தூய தமிழ் என்றால் என்ன என்பது அமைச்சருக்கு விளங்கவில்லை. இதில் ஆச்சரியப்படவும் ஒன்றுமில்லை—

காரணம் அமைச்சர் ஒரு சிங்களவர் —வேற்றினத்தவர். தமிழை—தமிழின் தனித்துவத்தை —அதன் சிறப்பை அறியாதவர்—தெரியாதவர்—புரியாதவர்!

தூய தமிழின் சுவைபற்றி அவர் அறியாதது—அதைப் பற்றி அவருக்கு விளங்காதது — நமக்கு எவ்வகையிலும் ஆச்சரியத்தை மூட்டவில்லை.

இதனால்தான் நாம் கூறுகிறோம்—தமிழன் தன்னைத் தானே ஆளவேண்டும்—சிங்களவரால் ஆளப்படும் இனமாக இருக்கக்கூடாது என்று!

தமிழ் ஈழத்தில், தமிழ் ஆட்சி இருந்து, தமிழர்களின் வானொலிக்குப் பொறுப்பாக தமிழர் ஒருவர் அமைச்சராக இருந்திருந்தால்—வானொலியில் தமிழின் தூய்மை சிதைக்கப்படுகின்ற நிலை தோன்றியிருக்குமா?

தூயதமிழ் என்றால் என்ன? அது எனக்கு விளங்கவில்லை—இது என்ன தமிழ்—எங்கே இதைப் பெறுவது என்று தமிழர் ஒருவர் வானொலித்துறை அமைச்சராக இருந்தால் கேட்டிருப்பாரா?

ஆக இதிலிருந்து என்ன தெரிகிறது?

தமிழன் தன்னைத்தானே ஆளவேண்டும் — தமிழ் ஈழத்தில் தனியாட்சி உருவாகவேண்டும்!

அப்போதுதான் தமிழின் தனித்துவம், தூய்மை—பாரம்பரியம், சிறப்பு அனைத்தும் பாதுகாக்கப்படும்!

சிங்கள அமைச்சரின் பதில் உணர்த்துகின்ற உண்மை இதுதான்!

—எஸ். ஆர். எம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் தனியே பிரிந்து சென்ருல் இலங்கையின் எதிர்காலமே இருள் சூழும்!

## இதை உணர்ந்து தமிழ் இனத்தின் உரிமைகளை தாமதமின்றி வழங்குவீர்!

### ஆட்சியாளருக்கு நேமிநாதன் எச்சரிக்கை!

இந்த வரவு செலவுத் திட்ட விவாதத்தில் பேசுவதா, இல்லையா என்று மிகுந்த ஆலோசனை செய்ய வேண்டிய நிலை இருந்தது. காரணம், சிறுபான்மையினராகிய தமிழ் பேசும் மக்களைச் சேர்ந்த ஒருவன் யான்: இன்று இலங்கையில் தமிழ்பேசும் மக்கள் நசுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு, உரிமைகள் பறிக்கப்பட்டு சிலிக்கும் நிலையில், இலங்கையின் பொருளாதாரத்தில் அக்கறை கொள்வதற்கு இடமுண்டா என்று அவர்கள் ஆலோசித்துக்கொண்டிருக்கிருர்கள். அந்நிலையில் யான் இதில் பங்கு பற்றுவதா, இல்லையா என்று யோசிக்கவேண்டியிருந்தது.

ஆனல், ஓர் இலங்கையன் என்ற நிலையில், இது எமது நாடு என்ற காரணத்தால், தமிழர் பண்பாட்டிலே பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும் பெரிதும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுப்பேணப்படுவது வழக்கமாதலால், அந்தப் பண்பாட்டின் அடிப்படையில், இலங்கையின் பொருளாதாரத்தைப் பற்றிப்பேசப்படும் பொழுது அதில் யான் பங்கு பற்றக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த வரவுசெலவுத் திட்டத்திலே சற்று மனத்தாங்கலுடன் பேசுகின்றேன். காரணம் நிதியமைச்சர் தமது உரையைச் சிங்களத்தில் நிகழ்த்தினர். அரசாங்கமும் அந்த உரையைச் சிங்களத்தில் வெளியிட்டு ஆங்கில மொழிபெயர்ப்பொன்றை கொடுத்திருக்கின்றது. இந்த ஆங்கில மொழிபெயர்ப்பை யாருக்காகக்கொடுத்திருக்கிறீர்கள்? இந்த நாட்டவரல்லாதவர்களுக்காகவா ஆங்கில மொழிபெயர்ப்பைக் கொடுத்திருக்கிறீர்கள்? இந்நாட்டில் வாழும் கணிசமான தொகை தமிழ் பேசும் மக்கள் நிதியமைச்சர் அவர்களின் பேச்சை அறியக் கூடியதாகத் தமிழில் மொழிபெயர்பபொன்றைக்கொடுக்கவில்லை என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இலங்கையின் பொருளாதாரம் மிகவும் மோசமாக இருப்பதை நாம் எல்லோரும் ஏற்றுக்கொள்கிறோம், உணர்கிறோம். இந்தப் பொருளாதாரம் அரசியல் தொடர்புள்ளது என்பதை எவராலும் மறுக்கமுடியாது. இலங்கையர்கள் என்று சொல்லும் பொழுது, சிங்களம் பேசும் மக்களையும் தமிழ் பேசும் மக்களையும் சேர்த்தே இலங்கையர்கள் என்று சொல்கிறோம். ஆனல், தமிழ் பேசும் மக்களை இலங்கையர்கள் அல்லாத ரீதியில் நடத்திக் கொண்டிருக்கும் பொழுது அவர்களது ஒத்துழைப்பை நீங்கள் எப்படிப் பெற முடியும்? அந்த ரீதியில் எப்படிப் பொருளாதாரத்தைப் பெருக்கமுடியும் என்பதை அரசாங்கம் உணர வேண்டும்.

சிங்களம் மட்டும் சட்டம் இலங்கையில் கொண்டு வரப்பட்டதன் பின்னர் தமிழர், சிங்களவர் என்ற பிரிவினையுடன் இலங்கை மக்கள் யோசிக்கத்தொடங்கினர்கள். அந்த ரீதியில் வடக்கு, கிழக்குப்பகுதிகளில் வாழும் தமிழர்கள் தங்களுக்குள்ளிருந்த வித்தியாசங்களை மறந்து தங்கள் பாஷையைக் காப்பதற்காக ஒற்றுமையுடன் போராடத்தொடங்கிருர்கள்.

இப்போது ஒரு புதிய அரசியல் சாசனம் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. அதிலும் எங்கள் அடிப்படை உரிமைகளுக்கு இடமில்லாமல் போய்விட்டது என்பதை உணர்ந்த இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் வாழும் தமிழ்மக்கள், ஒன்று சேர்ந்து, ஒரே மனத்தோடு தங்கள் உரிமைகளைக் காப்பாற்ற முன்வந்திருக்கிருர்கள். இதை நாங்கள் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும். நான் அமைச்சர்களுக்கும் அரசாங்க உறுப்பினர்களுக்கும் சொல்ல விரும்புவது என்னவென்ருல், பூனை கண்ணை மூடிக்கொண்டு பால் குடிக்கும் பொழுது உலகமே இருண்டுவிட்டது என்று நினைக்கின்ற ஒரு தன்மை இல்லாது நாட்டில் இருக்கின்ற உண்மையான நிலைமையை நாம் உணரக்கூடியதாக இருக்கவேண்டும். We must face facts.

இன்று இலங்கையிலே பெரும்பான்மையாக இருக்கும் சிங்களம் பேசும் மக்களும், தமிழ் பேசும் மக்களும் பிரிந்து தூரப்போய்க் கொண்டிருக்கிருர்கள். இதைத் தடுக்கவேண்டியது மிக முக்கியமாகும். இந்த நிலையிலே நாம் பிரிந்து கொண்டுபோனல் இலங்கைக்கு வருங்காலமே இல்லையென்பதை திட்டவட்[illegible]மாக நான் சொல்லிவைக்க விரும்புகிறேன்.

இன்று தமிழர்கள் ஒன்று சேர்ந்து அமைத்துக் கொண்ட தமிழர் கூட்டணி, கௌரவ முதலமைச்சரவர்களுக்கு 6 அம்சத் திட்டமொன்றைக்கொடுத்திருக்கிறது. இந்த 6 அம்சத் திட்டத்தை முதலமைச்சரவர்கள் பரிசிலனை செய்து, கூட்டணித் தலைவர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடாத்துவது மிக இன்றியமையாததென்பதை இலங்கையின் வருங்காலத்தைக் கருதி, நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

நாம் கண்ணை மூடிக்கொண்டு அப்படி ஒரு பிரச்சினை இல்லை என்று சொல்லிக்கொண்டு இருக்கமுடியாது. நாம் பாடசாலைகளிற் படித்த காலத்திலோ அல்லது தற்போதைய நேரத்திலோ நாங்கள் எங்களுக்குள் பேதமின்றி கதைத்துக் கொள்ளக் கூடியதாகவும் எங்கள் வித்தியாசங்களைத் தீர்த்துக்கொள்ளக் கூடியதாகவும் இருந்தது. ஆனல், இன்றைக்கு பள்ளிக்கூடங்களிற் படிக்கின்ற பொழுதிலும் உத்தியோகங்களுக்குச் செல்கின்ற வரையிலும் சிங்களப் பள்ளிக்கூடங்கள்—தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் என்ற ரீதியில் ஆரம்பித்து, மாணவர்கள் இரு வேறு பிரிவுகள் போல வளர்ந்து வருகின்றுர்கள். இந்நிலை வளர்ந்து கொண்டு போனல் வருங்காலத்தில் இவர்கள் எப்படிப் பிரிவினை [illegible] பான்மையுடன் [illegible] போகிருர்கள் என்பதைக் கற்பனைசெய்யவே முடியாத ஒரு நிலையிருக்கும்.

இதனை இன்று இருக்கும் தலைவர்கள் தீர ஆலோசித்துத் தீர்த்துவைக்காவிட்டால் வருங்காலத்தில் இரு சமுதாயமும் பிரிந்து குரோதமுள்ள சமுதாயங்களாகவே வளர்ந்து வரும் என்பதை நாம் உணரவேண்டும். 5 ஆண்டுத் திட்டமாக இருந்தாலென்ன, அல்லது 50 ஆண்டுத் திட்டமாக இருந்தாலென்ன நாம் அனைவரும் இலங்கையர் என்ற ரீதியில் ஒற்றுமையோடு—ஒரு மனத்தோடு செயல்பட்டால் ஒழிய ஒருவிதமான நன்மையையும் நாம் நம் நாட்டுக்குப்பெற்றுக் கொடுக்க முடியாதென்பதை நீங்கள் ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இங்கே நான் பேசுகின்ற நேரமெல்லாம் எமது நண்பர்கள் சொல்லுகிருர்கள் "உங்களுக்கு என்ன குறையிருக்கிறது; நாங்கள் உங்களுக்கு என்ன செய்யவில்லை? எல்லாவற்றையும் தந்திருக்கிறோம்" என்று ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் உங்களுக்கு இருக்கின்ற அவ்வளவு சலுகைகளும் எனக்கு இருக்கின்றது. ஆனல், பாராளுமன்றத்துக்கு வெளியிலே அந்த ரீதியில் நடக்கிறதா அல்லது அத்தகைய ஒரு சமமான நிலையிருக்கிறதா என்பதை நீங்கள் அவதானிக்கவேண்டும்.

அரசாங்கத்திலேயுள்ள ஒரு சிலர் இதை நன்கு உணர்ந்து நடக்கிருர்களென்பது எனக்கு நன்கு தெரியும். எனினும் அரசின் கொள்கைகளைச் செயல்படுத்துகின்ற உத்தியோகத்தர்கள் பலர் எத்தனையோ விளையாட்டுக்களைச் செய்கின்ருர்கள். அவர்களின் அத்தகைய விளையாட்டுக்களால் தான் இந்த இருபெரும் சமுதாயங்களும் மேலும் பிரிந்துகொண்டு போகின்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. இது முக்கியமாக எனது தொகுதியான திருகோணமலையிலே நடக்கிறது.

காரணமென்னவென்ருல், தமிழ்ப் பிரதேசங்களிலே, திருகோணமலையில் தான் சிங்களவர்களும் தமிழர்களும் கணிசமான அளவில் வாழ்கிருர்கள். அங்கே, உங்கள் அரசாங்கத்தைச் சொல்லி, அரசாங்க உத்தியோகத்தர்கள் செய்கின்ற துவேஷ நடவடிக்கைகளையெல்லாம் விரிவாக எடுத்துக் கூறுவதற்கு நான் தயாராக இருக்கின்றேன். விரோதமான நிலை வளராதிருக்க வேண்டும் என்பது தான் எங்கள் முக்கிய நோக்காகும். இத்தகைய துவேஷ நடவடிக்கைகளுக்கு நாம் முற்றுப்புள்ளி வைத்து எங்கள் நாட்டை நாம் காப்பாற்ற வேண்டும்."

(22-11-72 தேசியபேரவையில் ஆற்றிய உரையில் ஒரு பகுதி)

---

## சிங்களவர் சிரிக்கிருர்களாம்!

### நன்ருக அவர்கள் சிரிக்கட்டும்!

'அமெரிக்கர்கள் சந்திரனில் இறங்குகிருர்கள், ரஷ்யர்கள் விண்வெளியை ஆராய்கிருர்கள், ஜப்பானியர்கள் உலகம் முழுவதற்கும் வாகனங்களை உற்பத்தி செய்துகொண்டிருக்கிருர்கள், அப்படியிருக்கையில், வடக்கிலுள்ள நம் தமிழ் மக்களோ ஹர்த்தால்கள் நடத்திக்கொண்டும், மாணவர்களை பள்ளிக்கூடங்களுக்குச் செல்லவிடாமல் நிறுத்திக்கொண்டும், சத்தியாக்கிரகங்கள் செய்துகொண்டும் (?), ஒரு அரசாங்க வர்த்தமானப்பத்திரிகையை எரிப்பதற்குப் பல மைல்கள் நடந்துகொண்டும் இருக்கிருர்கள். வவுனியாவிற்குத் தெற்கிலுள்ள மக்கள் அவர்களை (தமிழ்மக்களை)ப் பார்த்துச் சிரிப்பதை(?) அவர்கள் அறியார்கள் போலும்.''

மேலே கண்டதைக் கூறியிருப்பவர் நிச்சயமாக ஒரு சிங்களவராகத்தான் இருப்பார் என்றுதான் பலரும் நம்புவார்கள். உண்மை அது வல்ல! சங்கானை கே. ரவீந்தா என்ற தமிழரே இப்படி எழுதியுள்ளார்—தமிழ் மக்களின் முதல் விரோதியான சிங்கள முதலாளியின் ஆங்கில நாளேடான ஏரிக்கரையின் 'டெயிலி நியூஸ்' 8-12-72 ஏட்டில்.

அமெரிக்கர்கள் சந்திரனில் இறங்குகிருர்களாம், ரஷ்யர்கள் விண்வெளியை ஆராய்கிருர்களாம், ஜப்பானியர் உலகம் முழுவதுக்கும் வாகனங்கள் செய்கிருர்களாம். என்னே பிதற்றல். அமெரிக்கர்களுக்கு நிறைய்ப் பணமிருக்கிறது, அதற்கும் மேலாக அரசியல் ரீதியிலும் மற்றெல்லா வகைகளிலும் [illegible] கிருர்கள். ஏறத்தாழ அதே நிலையிலுள்ள ரஷ்யர்களும் விண்வெளியை ஆராய்கிருர்கள்; அதே போல் சுதந்திரமும், பொருள்வளமுமுள்ள ஜப்பானியர்களும் உலகுக்கு வாகனங்கள் செய்துகொடுக்கிருர்கள். இதே நிலையிலா தமிழ் மக்களும் இருக்கிருர்கள்? முதலில் தமிழ் மக்களுக்குப் பொருளாதாரச் சுதந்திரமாவது இருக்கிறதா? நண்பர் ரவீந்தா இதைச் சிந்தித்தாரா?

உண்பதற்கே போதிய உணவுமில்லாமல், உணவு வாங்கப் பணமுமில்லாமல் வாடி வதங்குகின்ற மக்களின் கண்கள் பூமியில் என்ன கிடக்கிறது? என்ன வகையில் முயன்ருல் வாழலாம்? என்று கீழேயும், அக்கம்பக்கத்திலும் பார்க்காமல், எப்படி சந்திரனில் இறங்குவது? என்று மேலேயா பார்க்கும்? இப்படி மனக்கோட்டை கட்டி மயங்கும் நிலையிலா நாம் இருக்கிறோம். ஏதாவது ஒரு தொழிற்சாலை நிறுவவென்ருல் மந்திரிகளின் கால்களில் வீழ்ந்தும், கையுளைய எழுதியும், கால் தேய நடந்தும், ஒன்றுக்குப் பத்தாகச் செலவு செய்தும் முடிவில் என்ன பதில் கிடைக்கிறது?, வெளிநாட்டுச்செலாவணி இல்லை 'வேறு நொண்டிச் சாட்டுகளுடன், தொழிற்சாலை நிறுவும் எண்ணத்திற்கு முழுக்குப் போடும்படி 'யோசனை' தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில்—ஒரு மிதிவண்டியைத் தானும் ஏன்? ஒரு மிதிவண்டியின் 'டயரை'த்தானும்உற்பத்தி செய்ய தமிழர்களுக்கு அரசாங்கம் உதவி தர மறுக்கும் போது 'கா'ராம், 'லொறி'யாம், 'விமான'மாம்! அப்பப்பா இது என்ன கனவு?

தமிழர்களுக்கு என்ன தொழிற்சாலை? அவர்களுக்கு என்ன மானமுள்ள வாழ்வு? நம்மை (சிங்களவரை) அண்டிப் பல்லிளித்து (இப்போது சில 'சாம்பிள்'கள் இருப்பதுபோல்) மானங்கெட்டு,முழந்தாளில்நின்று, தாமிடும் பிச்சையை ஏற்று வாழ்வதை விட்டு, எம்மை (சிங்களவரையும் அரசாங்கத்தையும்) எதிர்த்து நின்று போராடி, உரிமை என்று கேட்க தாம் என்ன நொண்டிகளா? என்ற எண்ணத்தில் தமிழ் மக்களின் தொழில் வாய்ப்பு, கல்வி வசதி இவற்றைத் திட்டமிட்டு அரசாங்கம் நசுக்கி வரும் வேளையில், அரசின் அனுமதி இல்லாமல் கையையும், காலையும் அசைக்கமுடியாதுள்ள நாம்—அரசியல் ரீதியில் எந்த வகையான உரிமையும் இல்லாத முழு அடிமைகளான நாம்—சந்திரனில் இறங்கவும், விண்ணை ஆராயவும், கார், லொறி செய்யவும் எப்படி இயலும்? புராண நூல்களில் வருகின்ற 'மயன்' என்ற தேவதச்சனின் பரம்பரையினர் தமிழ் மக்கள் என்ற எண்ணமா?

மேலும் அந்த அன்பர் கூறுகிருர் 'சிங்கள சிறீ (ஸ்ரீ)யை எதிர்த்து விட்டு இப்போது சிங்கள சிறீ இலக்கம் தாங்கிய வாகனங்களில் செல்கிருர்கள்' என்று.

பிறநாட்டுத் துணிகள் கூடாது என்றும், உள்நாட்டிலே உற்பத்தி செய்த துணிகளையே அணிய வேண்டும், அதன் மூலம் எமது பணம் பிறநாடுகளுக்குச் சென்றடைவதைத் தடை செய்ய முடியும் என்றும் கூறி, கதர் ஆடையை அணிந்து,' வின்ஸ்டன் சேர்ச்சி'லால் 'அரை நிர்வாணப் பக்கிரி' என்று வர்ணிக்கப்பட்ட அண்ணல் காந்தி அடிகள் கூட பிற நாட்டுப் பொருள்கள் முழுவதையும் ஒதுக்கிவிடவில்லை. வெள்ளையரால் செய்யப்பட்ட 'ரயிலில்' (தொடர் வண்டி) பிரயாணம் செய்த

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசு மீது தமிழ் மக்கள் நம்பிக்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

லாமென்று தபாலமைச்சர் தெரிவித்தார்.

நான் தபால் அமைச்சருக்குத் திட்டவட்டமாக கூறிவிடவிரும்புகிறேன் — நாங்கள் இங்கு வந்தது பதவி பெறுவதற்காகவல்ல தமிழ் மக்களின் உரிமைகளைக் காப்பாற்றவே நாம் இங்கு வந்திருக்கிறோம்.

கே. பி. ரத்தினயகா:— வடக்கில் குழப்பத்தை உண்டாக்கவும் ...!

செல்லத்தம்பு:— அது உங்கள் கருத்து. தமிழ் மக்கள் இழிவான நிலைக்கு தள்ளப்படாமல் பார்த்துக்கொள்ளவும், இந்தச் சபையின் முன்னால் தமிழ் மக்கள் அடைந்துவரும் துன்பங்களை எடுத்துச் சொல்லுவுமே நாம் இங்கு வந்திருக்கிறோம் —

எங்களுக்கும் தபாலமைச்சருக்கும் தனிப்பட்ட எந்தத் தகராறும் கிடையாது. அவருடன் பகைமை எதுவும் கிடையாது. தமிழர் கூட்டணியில் உறுப்பினராக இருப்பதற்கு எங்களுக்கு இருக்கின்ற உரிமைபோல, சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் உறுப்பினராக இருப்பதற்கு அவருக்கும் உரிமையிருக்கிறது. அதுதான் சனநாயகத்தின் அடித்தளம்.

ஆனால், அவர் மீது எங்களுக்கு மனஸ்தாபம் என்னவென்றால், மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத அவர்—மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை மதிக்க மறுப்பதுதான். கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களே அவரைச் சுற்றியிருக்கிறார்கள். இந்நாட்டுத் தமிழ் மக்களின் சார்பில் பேச அருகதையற்றவர்கள் — தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்கு அற்றவர்கள் — இப்படிப்பட்டவர்களே அமைச்சரைச் சுற்றியிருக்கிறார்கள். இதனுல்தான் அமைச்சருடன் நாங்கள் தகராறு கொள்ள வேண்டியிருக்கிறது.

கட்சி வேறுபாடின்றி இந்தச் சபையின் உறுப்பினர்களுடன் தொடர்பு கொண்டு காரியம் பார்க்கும் பொது விவகார உள்நாட்டு, உள்ளூராட்சி அமைச்சரின்றோ, அல்லது காணி விவசாய அமைச்சரின்றோ முன் மாதிரியை அவர் பின்பற்றுவாரானுல், அவர் மீது எங்களுக்கு பகைமை எதுவும் ஏற்படாது.

தபாலமைச்சர் தனது வழிமுறைகளை மாற்றிக்கொள்ளவிரும்புகிறார் என்பதை என்னுல் உணர முடிகிறது. கடந்த வெள்ளிக்கிழமை அவர் நிகழ்த்திய உரையிலிருந்து இதைக் காணுகிறேன்.

இந்த வரவு செலத்திட்டத்தின் மீது பேசும்போது தமிழ் மக்களின் பிரச்சினைகளையிட்டும் பேச விரும்புகிறேன். ஏனெனில் இந்நாட்டுத் தமிழ் மக்களின் பிரச்சினைக்கும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கும் சம்பந்தமிருக்கிறது.

சில காலத்துக்கு முன் அரசாங்கக்கட்சி உறுப்பினர் ஒருவர் கேட்டார்—தமிழர் கூட்டணி எப்படி வளருகிறது என்று. நான் அவருக்குக் கூறினேன் — அரசாங்கத்தினதும், அரசாங்கத்தின் தமிழ் ஆதரவாளர்களினதும் செயல்களால், தமிழர் கூட்டணி பலம் பொருந்தியதாக வளர்ந்து வருகிறது என்று.

1970ம் ஆண்டு மே மாதம் இந்த அரசாங்கம் அமைக்கப்பட்டபோது, கடந்த 25 ஆண்டுகளாக பல்வேறு அரசாங்கங்களும் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தி வந்த பிரச்சினைகளில் சிலவற்றுக்காவது இந்த அரசு தீர்வு காணும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்த்தார்கள். இந்நாட்டில் தமிழ் மக்களின் உரிமைகளை பாதுகாக்க, திரு. செல்வநாயகம் தலைமையில் பல்வேறு வழிமுறைகளையும் தமிழ் மக்கள் கையாண்டு பார்த்துவிட்டார்கள். சிங்களச் சகோதரர்களுடன் எத்தனையோ ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும் எழுதப்பட்டன; பின்னர் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதற்குக் காரணம் சிங்களத் தலைவர்களிடம் நல்லெண்ணத்துக்கு ஏற்பட்ட பஞ்சமா அல்லது அவர்களின் நிலையற்ற அரசியல் போக்கா என்று பலர் சிந்தித்ததுண்டு.

அதனுல்தான் இந்த அரசு அமைக்கப்பட்டபோது நாம் இதை வரவேற்றோம். இந்த அரசாங்கம், தனது மிக அதிகப்படியான அரசியல் அதிகாரத்தையும் பலத்தையும் பயன்படுத்தி, தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வராவிட்டால், தமிழ் மக்களது நியாயபூர்வமான உரிமை வழங்க முன்வராவிட்டால் — அதற்குக் காரணம், நிச்சயமாக அரசியல் பலவீனமாக இருக்க முடியாதென்று கருதினேம். அதனுல்தான், புதிய அரசியல் சட்டம் ஒன்றை உருவாக்க பிரதமர் எம்மை அழைத்தபோது, அதில் பங்குபற்றச் சென்றேம்.

'புதிய அரசியல் சரித்திரம் உருவாகிய கதை முடிந்துபோன கதை. ஆனுல் ஒன்றுமட்டும் தான் இங்கு கூறுவேன். புதிய அரசியல் சட்டம் தமிழ் மக்களை இரண்டாந்தர பிரஜைகள் ஆக்கிவிட்டது. இந்த நிலையிலிருந்து கொண்டு சிங்களவர்களுடன் ஒன்றுபட்டுழைக்க தமிழ் மக்களால் ஒருபோதும் முடியாது.

''இன்று தமிழ் மக்கள் விரக்தியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டு விட்டனர். இந்த அரசாங்கத்தில் நம்பிக்கையை இழந்தும்விட்டனர்.

— வளரும்

# தி. மு. க.வும் எம். ஜி. ஆரும்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறிய மாதிரி மாநில சுயாட்சியில் நம்பிக்கையுள்ளவராக இருந்தால், இவர் ஏன் டெல்லிக்குச் செல்ல வேண்டும்? மக்கள் மத்தியில் வருவேன் என்று கூறியவர் இதுவரை காலமும் ஊழல் குற்றச்சாட்டுக்களை ஆதாரங்களோடு கூருமல் இருப்பது ஏன்?

குடிசையில் இருந்தவன் எப்படி மாளிகைக்கு வரலாம்?'' என்றொரு கேள்வியை எம். ஜி. ஆர் எழுப்புகிறார். இந்தக் கேள்வியைப் பார்க்கும்போது எம். ஜி. ஆரின் வள்ளல் மனத்தின் மீதே நமக்கொரு ஐயம் ஏற்படுகின்றது. உண்மையில் ஏழைகளின் நலத்தில் அக்கறையுடைய ஒருவர் இப்படிப்பட்ட ஒரு கேள்வியைக் கேட்டிருக்க மாட்டாரே! குடிசையில் இருந்தவன் என்றைக்கும் குடிசையிலேயே இருக்கவேண்டும். அவன் என்றைக்கும் மாளிகைக்கு வரவே கூடாது என்றொரு தொனி அந்தக் கேள்வியிலே தொக்கி நிற்கிறதே தவிர, நியாயமற்ற ஒன்றைக் கண்டிக்கும் தொனி அந்தக் கேள்வியிலே நிச்சயம் தென்படவே இல்லை.

தமிழக அரசியலில் இன்னெரு கோமாளித்தனமும் நடைபெறுகிறது. இதுவரையில் ஜனநாயகம், ஜனநாயகம் என்று தொண்டை கிழியக் கத்திக்கொண்டு இருந்தவர்கள் கூட, இப்பொழுது பெரும்பான்மை மக்களின் வாக்கு பலத்தைக்கொண்டு ஆட்சி அமைத்த தி. மு. க. ஆட்சியைக் கலைத்துவிட்டு ஜனுதிபதி ஆட்சியைக் கொண்டுவரவேண்டுமென்று கூக்குரலிடுகிறார்கள். ராஜாஜி கூடச்சொல்கிறார். தி. மு. க. ஆட்சியக்கள் நம்பிக்கையை இழந்துவிட்டதாம். அதனுல் ஜனுதிபதி ஆட்சியைக்கொண்டு வரவேண்டுமாம். ஜனநாயகத்தின் காவலர் என்று கூறப்படும் ராஜாஜியா இப்படிக் கூறுகிறார் என்று நாம் மூக்கின் மீது விரலை வைக்கின்றோம்: தமிழ் நாட்டில் சட்டமும், ஒழுங்கும் கெட்டுவிட்டது என்று கூறுபவர்கள், சட்டமும், ஒழுங்கும் கெடுவதற்குத் தாங்கள் தான் காரணகர்த்தாக்கள் என்பதை மறந்து விட்டார்கள்.

ஆரம்பகாலமுதல் தி. மு. க. ஆட்சியை ...

தமிழ் உணர்ச்சியையும் அண்ணுவின் அயரா உழைப்பையும், ஏழைகளின் நல்வாழ்வையும் அடித்தளமாகக்கொண்டு எழுப்பப்பட்ட தி. மு. க. கோட்டையை அழிப்பதற்கு மாற்ருர் செய்யும் முயற்சி வெற்றி பெருது என்பதே என் போன்ருேரின் நம்பிக்கையாகும். எங்கள் நம்பிக்கை. வெல்வதற்குத் தமிழ்நாட்டு மக்கள் உதவுவார்கள் என்றே எண்ணுகின்றேன்.

குமுதம் போன்ற பத்திரிகைகளுக்கு இன்று எம். ஜி. ஆர் ஒரு ஹீரோ. முன்பெல்லாம் எம். ஜி. ஆரை மறைமுகமாகத் தாக்கி வந்த இந்தப் பத்திரிகைகள் இன்று எம். ஜி. ஆரை மகாத்மா காந்தியின் வாரிசாகக் காட்ட முயற்சிக்கின்றன. சினிமாவைப் பொறுத்தவரை ஹீரோவுக்குத்தான் இறுதியில் வெற்றி. இதுதான் தமிழ்ப்பட விதி. ஆனுல், தமிழ்ப்படங்களில் ஹீரோவாக நடிக்கும் எம். ஜி. ஆருக்கு அரசியலிலும் வெற்றி ஏற்படுமா என்பது சந்தேகம்தான். ஏனெனில் தனிப்பட்ட மனிதர்களை விடக்கொள்கைகளுக்குத்தான் மக்கள் மதிப்புக்கொடுக்கின்றனர். ஏனெனில் மனிதர் மாறுவார்கள், ஆனுல் கொள்கைகள் மாறுவதில்லை.

# இவர்களும்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

வெதும்புகிறது!! ஒரு நாளாவது கூண்டு திறபடதா? தனக்குச் சுதந்திரம் கிட்டாதா?' என்று ஏங்குகிறது. பசும் பொந்தில் படுத்தாலும், பச்சமிளகாய் தின்றாலும் சுதந்திர தாகத்தால் துடிக்கிறது பறவை!

ஆனுல் இந்த அடிவருடிகளோ! ஒரு சிறு உத்தியோகத்துக்கு—ஒரு ஜெ. பி. பட்டத்துக்கு சுயநலப் பித்தால் எழுகின்ற) சுகபோக வாழ்வுக்கு நாளுக்கொரு கொள்கை! ஆளுக்கொரு கட்சி!! என்று அமைத்து தமது கோழைத்தனத்தை வெளிப்படுத்தி உரிமை அழிகின்றது ஏதோ பெரிய பெருமை கிடைத்தவர்களைப் போல் பவனி வருகின்ருர்கள்! இவர்...

பார்த்தவர்கள் புளுகுகிருர்கள்
கவலேவேண்டாம்
நீங்களும் புளுகலாம் மீண்டும் சந்திக்கிருர்
'புளுகர் பொன்னேயா'
23-12-72 சனி 24-12-72 ஞாயிறு
மாலே 6-30 மணிக்கு, பம்பலப்பிட்டி
சரஸ்வதி மண்டபத்தில்
17ம் திகதிபோல் ஏமாறவேண்டாம் ஆசனங்களை சரஸ்வதி மண்டபத்தில் முன் பாக பதிவுசெய்யலாம்.

வாழ்த்துக்கள்
அன்பர்கள், ஆதரவாளர்கள், விற்பனையாளர்கள் பாவிப்பாளர்கள் அனைவருக்கும் எமது நத்தார் வாழ்த்துக்கள் உரித்தாகுக.
மில்க் வைற் சோப் தொழிற்சாலே
த. பெ. இல. — 77, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வங்காள தேசத்துடன் உறவு ஏற்படுத்துக!

## தேசிய அரசப் பேரவையில் வி. என். நவரத்தினம் பேச்சு!

இந்த விவாதம் முழுவதிலும் பிரதமர் இங்கு சமூகமாயிருப்பதற்கு நாம் நன்றியுடையவர்கள். எமக்குள் எவ்வித வேறுபாடுகள் இருந்தாலும் ஒரு பொது நோக்கு மற்ற நாடுகளுடனன உறவுகளில் இருக்கும்.

ஐ. நா. விலுள்ள எமது பிரதிநிதி அரசாங்கத்தின் கொள்கைக்கு முரணாக நடந்துகொண்டிருக்கிறார். இனிமேலாவது இத்தவறு நிவர்த்திக்கப்படவேண்டும்.

பிழையான பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதனால் தான் இப்படியான தவறுகள் நடக்கின்றன. ஐ. நா. பிரதிநிதியான ஷேர்லி அமரசிங்கா தமது கடமையிலிருந்து தவறிவிட்டார்.

வங்காள தேச விஷயத்தில் அவர் நடந்துகொண்டது உங்களறிந்ததே.

சர்வதேச சட்டக் கமிஷனுக்கு திரு. பின்ரோ என்பவரை அனுப்புவதற்குப் பதில் திரு. ரி. எஸ். பெர்னாண்டோவை நியமித்திருந்தால் தமது நாட்டுக்கு நல்ல பெயர் கிடைத்திருக்கும். தற்போது இங்கு எழுந்த பிரச்சினையும் எழுந்திருக்காது. (சிரிப்பு)

வங்காள தேசத்துடன் நாம் இராஜதந்திர உறவை ஏற்படுத்தவேண்டும். அது தமது வர்த்தகத்துக்கு வழிவகுக்கும். இதைத் தவிர வங்காளத்துடன் எமது நாட்டுக்கு நெருங்கிய தொடர்பும் உண்டு. இங்குள்ளவர்களின் மூதாதையர்கள் வங்காளத்திலிருந்து வந்ததாகக் கூறப்படுகிறது. அவர்கள் அந்த நேரத்தில் கள்ளக்குடியேற்றக்காரர்களாகத்தான் வந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். இன்றிருப்பதைப்போல அன்றும் அதா



வது குவேனியின் ஆட்சியில் குடியேற்ற வெளியேற்றச் சட்டங்கள் இருந்திருந்தால் இங்கு என்ன நடந்திருக்கும். (சிரிப்பு).

இஸ்ரவேலுடனும், வட கொரியாவுடனும் உறவை நாம் மறுபடியும் ஸ்தாபிக்க வேண்டும். பயங்கரவாதத்தில் முதல் இரண்டாவது வாரங்களில் வட கொரியர்கள் இங்கிருந்து அனுப்பப்பட்டனர்.

காங்கேசன்துறை இடைத்தேர்தலை நடத்தாததற்கு பல காரணங்களைப் பிரதமர் முன்னர் தெரிவித்தார். பிரதமராக இருப்பவர் ஒருவர் பேசும்போது குறுக்கிடக்கூடாதென்பதற்காக நாம் அன்று (பட்ஜெட் விவாதத்தின்போது) பேசாமல் இருந்து விட்டோம். ஆனால் அவர் அன்று கூறிய சம்பவங்கள்கூட இன்றில்லை. அதனால் இனியும் தாமதிக்காமல் தேர்தலை நடத்த வேண்டும்.

காங்கேசன்துறைத் தொகுதியில் எதுவித சம்பவமும் நடைபெற்றதுண்டா? குருநகர் குழப்பத்துக்கு இரு பிரிவினர்தான் காரணம். இப்போது திரு. ஆர். சுந்தரலிங்கத்தின் முயற்சியால் அங்கு அமைதி நிலைநாட்டப்பட்டிருக்கிறது.

அன்று பிரதமர் பேசுகையில் எல்லோரும் இராஜினாமாச் செய்யுங்கள். தேர்தலை நடத்துகிறோம் என்றார். அதன் மூலம் அவர் தனது உள்ளத்தரங்கத்தை வெளிப்படுத்திவிட்டார்.

நாம் எல்லோரும் பதவி விலகினால் மட்டும் அப்போது எப்படி நீங்கள் கருதும் தேர்தல் நடத்தக்கூடிய சூழ்நிலை உருவாக முடியும் என்று கேட்கிறேன்.

திருமதி வீவியன்:— நீங்கள் உங்கள் தலைவரைக் கைவிட்டுவிட்டீர்கள்.

திரு. நவம்:— நாம் எவரையும் கைவிடவில்லை. தேர்தலை நடத்திப்பார்த்தால் அது தெரியும்.

# பாடநூல் விலை உயர்வால் வாடுகிறார் பெற்றோர்கள்!

## தேசிய அரச பேரவையில் இராசதுரை!



'மிக பயங்கரமான ஒரு விடயத்தை நான் கூற விரும்புகிறேன்; அதாவது பாடசாலைப் புத்தகங்களினுடைய விலை அதிகரிப்புப் பற்றியது அவ்விடயம். இந்த நாட்டில் பாடசாலைப் புத்தகங்களைத் தனி நபர்கள் அச்சிட்டுக் கொள்ளை இலாபம் அடிக்கிறார்கள் என்ற காரணத்தினால் பாடசாலைப் புத்தகங்கள் அச்சிடுவதை அரசாங்கம் கையேற்றது. பாடசாலைப் புத்தகங்களைத் தனியார் அச்சிட்ட காலத்திலேயே அழகான புத்தகங்கள். மலிவான புத்தகங்கள் தரமான புத்தகங்கள், நல்ல அறிஞர்களுடைய கட்டுரைகளைத் தொகுத்த புத்தகங்கள் வெளிவந்தன.

ஆனால், இன்று பாடசாலைப் புத்தகங்களின் விலை அதிகரித்திருக்கிறது என்று சொல்கிறார்கள். அதற்கு வேண்டிய தாள்கள் நமது வாழைச்சேனைக் காகிதத் தொழிற்சாலையில் கிடைக்கின்றன. அச்சுக் கூலி அதிகரித்திருக்கிறதா? அல்லது பாடசாலைப் புத்தகங்களைத் தயாரிப்பவர்களுக்குக் கொடுக்கின்ற சம்பளம் அதிகரித்திருக்கிறதா? நமக்குத் தெரியவில்லை. அரசாங்கத்தினுடைய பரீட்சைக் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிற நோக்கிலே பாடசாலைப் புத்தகங்களின் விலையும் உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதைத் தயவுசெய்து அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

ஒரு குடும்பத்தில் பட சாலை செல்லும் நாலு பிள்ளைகள் இருந்தால் இந்தப் பாடசாலைப் புத்தகங்களின் விலை அதிகரிப்பால் அந்தக் குடும்பம் எவ்வளவு கஷ்டப்படும் என்பதை அரசாங்கம் தயவு செய்து சிந்தித்துப்பார்க்க வேண்டும். அரசாங்கத்துக்கு நிர்பந்தத்தை ஏற்படுத்துவதற்காக நான் இவற்றைச் சொல்லவில்லை.

கல்வித்திணைக்களம் வெளியிடும் பாடசாலைப் புத்தகங்களின் விலை சுமார் 300 சதவிதத்தால் அதிகரித்திருக்கிறது. காகிதம், மை முதலியவற்றின் விலை அதிகரிப்பைத் தொடர்ந்துதான் இது விலையேற்றம் என்று சொல்லப்படுகிறது. உற்பத்திப் பொருள் விலையேற்றமே இந்த விலையேற்றத்துக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. உதாரணமாக ஒரு விடயத்தை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். 1965 ஆம் ஆண்டின் பின்னரே இப் புத்தகங்களின் விலை உயரத் தொடங்கியிருக்கிறது:

கணித புத்தகம் முதலாம் வகுப்புக்கு முந்திய விலை சதம் 25.

தற்போதைய விலை ஒரு ரூபா.

கணித புத்தகம் 2 ஆவது பாரம், முந்திய விலை ரூபா 1-40 தற்போதைய விலை ரூபா 2.

கணித புத்தகம் 3 ஆவது பாரம், முந்திய விலை ரூபா 1.50 தற்போதைய விலை ரூ. 2.50.

கணித புத்தகம் 4 ஆவது பாரம், முந்திய விலை ரூபா 2.30. தற்போதைய விலை ரூபா 2.75.

கணித புத்தகம் 5 ஆவது பாரம், முந்திய விலை ரூபா 2.40. தற்போதைய விலை ரூபா [illegible]

[illegible]

## மடிந்துபோ தமிழா!

— காசி ஆனந்தன் —

தேனைப் பொழிந்தும் கனிகள் சொரிந்தும்
செங்கரும்பைப் பிழிந்தும்
ஆநெய் கறுவா ஏலம் கலந்தும்
அமுதாய்த் தமிழ்ப் புலவன்
ஊனை உயிரை உருக்கும் தமிழை
உன்றனுக்கே படைத்தான்...
சோலைப் பயலே! தமிழை இழந்தும்
துள்ளுகின்றாயோடா?

முத்துக் குறளும் காப்பிய மைந்தும்
முதுகாப்பியன் தமிழும்
பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும்
பதிகமும் உலாநூலும்
தித்திக்கும் கம்பன் புகழேந்தி
தேன் தமிழும் வீழ்ந்தே
செத்துத் தொலையப் பகை சீறியது ...
சிரிக்கின்றனையோடா?

காளமேகக் கவிதை மழையும்
கவிபாரதி தமிழும்
கோலத் தேம்பாவணியும் அழகு
கொஞ்சுநற் சீறாவும்
தாளம் போட்டுப் பிழையாப் பாரதி
தாசன் வெறித் தமிழும்
ஏலம் போட்டார் பகைவர் அடநீ
எங்கொளிந்தனையோடா?

முன்னைத் தமிழன் அன்னைத் தமிழை
முக்கூடல் நிறுவி
கண்ணாய் உயிராய் ஓம்பிய காலம்
கனிந்த பெருமையெலாம்
உன்னை ஒருதாய் உருவாக்கியதால்
உடைந்து துகள் படவே
மண்ணானது மானம் என வீழ்ந்தாய்
மடிந்து போ தமிழா!

('உயிர் தமிழுக்கு' நூலிலிருந்து)

## "சீறிச் சினக்கிறது"

'பாண்டியூர் பரமேஸ்'

சிறையினில் பூட்டி என்ன
செய்திடப் புகுவாய் எங்கள்
மறத்தமிழ் உரிமை யின்றி
மடிந்திடப் போவ தில்லை;
அறத்தினால் வென் றெமது
அருந்தமிழ் மக்கள் ஆண்ட
பிறகுதான் எமக்குச் சாவு
பிதற்றலென் றெண்ணி டாதே;
உறுத்தல்தான் உண்மை எங்கள்
உரிமையின் வேட்கை யாலே!

அடிமைகள் என்று எம்மை
அடக்கிட லாமோ எங்கள்
உடமைகள் கிடைக்கு மட்டும்
உறக்கமும் தேட மாட்டோம்;
தடியரே உரிமை இன்னும்
தந்திடத் தயக்க மென்ன
துடிக்கிறாய் உனது கையில்
'துடுப்புகள்' உள்ள தென்று
கடிக்கிற நாய்க்கு மோர்நாள்
கடுகிடும் மரணம்; அறிவாய்!

## உன்னை நான் பாடமாட்டேன்!

— கொற்றை பி. கிருஷ்ணானந்தன் —

அழகிய கவிதை தன்னால்
அரியதோர் தொண்டு செய்து
உழுகிறாய் தமிழ் நிலத்தில்
உணர்ச்சியை விதைக்க என்று!
அழுகிய விதைகள் கொஞ்சம்
அங்குள்ள படியா லன்றோ
விளைகிற விதையைக்கூட
வீணடிக் கின்ற தப்பா!

உரிமைகள் வேண்டு மென்று
ஒருமுறை யல்ல; நீதான்
இருபது தடவை மேவாய்
இடியுதை பட்ட தெல்லாம்
தெரிகிற தெனக்கு நண்பா!
தெரிந்துள்ள போதும் என்ன
சிறையினில் வாடும் உன்னைச்
சீர்கவி பாட மாட்டேன்!

செந்தமிழ் மக்கள் வாழ்வு
சிரழி வுற்றி டாமல்,
உந்தனின் கவிதை தன்னால்
உணர்ச்சியைப் பெற்ற தென்று,
இந்தமா நிலத்து மக்கள்
இயம்பின போதும் என்ன?
உந்தியே பாயும் பாவால்
உன்னை நான் பாட மாட்டேன்!

உன்னைநான் பாடி வந்தால்
உயர்ந்தநல் லுத்தி யோகம்
என்னைவந் தடைய மாட்டா(து)
எம். பி. மார் அமைச்சர் மாரை
வண்ணமாய்ப் பாடி வந்தால்,
வந்திடும் பதவி; இதனால்
உன்னைநான் பாட மாட்டேன்!
உன்னைநான் பாட மாட்டேன்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்களும் தமிழர்களாம்!

# நம்பவே முடியவில்லை!

உலகத்தின் பல பாகங்களிலும் இன ஒடுக்குமுறைகள் நடைபெற்றிருக்கின்றன. அவற்றிற்குப் பரிகாரமும் காணப்பட்டிருக்கின்றன. ஒரு மொழி பேசும் மக்களை இன்னொரு மொழி பேசும் மக்கள் தாங்கள் அவ்வவ் நாடுகளில் தொகையிற் கூடுதலாக வாழ்வதால் சிறிய அளவு தொகையைக் கொண்ட மொழிபேசும் மக்களை அவர்கள் மனிதர் அல்லர் மாக்கள் என்று எண்ணி நீதிக்கு ஒவ்வாத வகையில்— உண்மைக்குமாறான வகையில் அவர்கள்மீது அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றன.

இதனால் நீதிதேவனின் பதிலைக் கேட்டு அடக்குமுறைக்கு அடிபணியாது — அவர்களுக்கு தொண்டுசெய்தல்; குற்றேவல் புரிதல் போன்ற மானம் கெட்ட கீழ்த்தரமான செயல்களைப் புரியாது நெஞ்சிலே உறுதிபூண்டு அவ் வஞ்சகச் செயல்களை எதிர்த்து துப்பாக்கித் தோட்டாக்குள்; குண்டாந்தடிக்கு அஞ்சாது பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலிகொடுத்து—உரிமைக்கு ஈடாகக் கொடுத்துப் போராடி வெற்றியும் கண்டுள்ளார்கள்! இப்படி உரிமைக்குப்போராடிய மக்கள் தோல்வி கண்டது எங்குமேயில்லை — என்றுமேயில்லை—இனியுமில்லை.

தங்களது உரிமைகள்பறிக்கப்படும்போது — அவை மதிக்கப்படாது மிதிக்கப் படும்போது அம்மக்கள் கிளர்ந்தெழுவதும், தமது உரிமையைப் பெறப் போராடுவதும் இனவெறியோ அல்லது குறுகிய மனப்பான்மையோ அன்று. மனிதத் தன்மைகொண்ட — அறம் கொண்ட செயல். தன்மானச் செயல்!! ஆனால் ''தன்மானத்தை''த் தனது சொத்து என்று பெருமை கூறும் தமிழினமோ இல்லை, இல்லை. ''நானும் தமிழன் தான்'' என்று கூறுகின்ற ''குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக்காம்பு''களோ — மானம் மரியாதையற்ற மரக்கட்டைகளோ என்ன கூறுகிறார்கள் தெரியுமா?'' ஒரு மொழியை இன்னொரு மொழியழித்தது என்று வரலாறு இல்லை'' என்று கூறுகிறார்கள்! ஏ! மரமண்டையர்களே ஒரு மொழியை இன்னொரு மொழி ஏன் அழிக்காது? சிங்கள மொழித்

நமினே

**நாக. பஞ்சாட்சரம்**

இனிப்பால் இன்று சிங்களமயமாகிவரும் குடும்பங்கள் புத்தளத்தில் எத்தனை? எத்தனை?!

ஒரு மொழியை இன்னொரு மொழி அழிக்கின்றபோது, மானம்கொண்ட இனமோ கொதித்தெழுகின்றது—அக் கொடுமையை எதிர்த்தெழுகின்றது!! தமது மொழியை அழிவினின்றும் காப்பாற்ற ஆயிரம் ஆயிரம் உயிர்களைக் காணிக்கையாக்கி — இனவெறியர்களின் துப்பாக்கித் தோட்டாக்கு இரையாக்கி தமது மொழியைக் காத்திருக்கின்றன!

''ஒரு மொழியை இன்னொரு மொழி அழிக்காது'' என்று கூறிச் கம்மா இருந்திருப்பார்களேயானால் இன்று உலகத்தில் எத்தனையோ மொழிகள் தோன்றியதே தெரியாமல் அழிந்திருக்கும். ஆனால் தமிழினத்தில் தப்பித் தவறிப் பிறந்த தறுதலைகளோ மானம் மரியாதையற்று — ரோசமற்று ஆட்சியாளருக்கு அடிவருடிகளாகி அவர்களது எச்சிலுடனே அவர்களுக்கு துதி பாடலே தமது பணியென்று தவம் கிடக்கின்றனர்!

அதுமட்டுமன்றி —

தமிழினத்தின் தன்மானப் போராட்டத்தில் குதிக்கும் மக்களுக்கு ''குட்டிக்கதைகள்'' மூலம் ''விளக்கம் தருகிறார்கள்.

''ஒரு ஊரிலே ஒரு அண்ணனும் தம்பியும் இருந்தார்கள். அண்ணனே பெரிய பணக்காரன். தம்பியோ ஏழை. அண்ணனுக்கும் பெண்கள் இருந்தனர். தம்பிக்கும் பெண்கள் இருந்தனர்! அண்ணன் தனது வீட்டில் நடந்த திருமண வைபவத்திற்கு தம்பி தன்னை அண்ணன் வந்து கூப்பிடவில்லையென்று போகவில்லை. ஆனால் அண்ணனே அவன் வந்தால் வருகின்றான்—வராவிட்டால் போகின்றான் என்று அவனையும் கவனிக்காது தனது மகளின் திருமணத்தை இனிதே நடத்தினார்! தம்பியோ கோபித்துக் கொண்டு கொஞ்ச நாள் இருந்துபார்த்தான்—தனது மகளுக்குக் கல்யாணம் செய்துவைக்க அவனிடம் பணம் இல்லை. அண்ணனிடம் சென்றான். எனது பிழையை மன்னிக்கவும். எனது மகளைக் கல்யாணம் செய்து வைக்க ஏதாவது உதவி செய்யுங்கள் என்று கேட்டான். அண்ணனே தனது மகளுக்குக் கொடுத்த பணத் தொகையின் அளவில் ஒரு பகுதித் தொகை அளவு பணத்தை தம்பிக்குக் கொடுத்தான் — இந்த நீதி தான் இலங்கையின் நீதி.''

அண்ணன் சிங்களவன். தம்பி தமிழன். இது தான் அந்த அடிவருடியின் கதை; நல்ல இனிமையான கதை. ஆனால் எதற்கு உவமையாகக் கூறப்பட்டதோ அங்கே தான் பிழை. எச்சிலை நக்கிய நாய்க்கு வேறென்ன! உவமையேது! கதையேது!! இரச்சித்துண்டே அதுக்குப் போதும்!!!

அண்ணன் பணக்காரன்! தம்பி ஏழையா? நக்கிய உன் நாக்கு இதைத்தானே கூறும்!! அண்ணனுக்கும் தம்பிக்கும் போகவேண்டிய சொத்தை அண்ணனே சுருட்டிக் கொண்டு — கொடுக்க மறுகின்றான்! தனது பங்கைத் தா என்று தயவாகக் கேட்டான் தம்பி! சற்றுக் கடுமையாகக் கேட்டான் இனி நீதிமன்றத்துக்குத்தான் போவான்—அங்கே நீதி கிடைக்குமே யொழிய பிச்சைக்குப் போகமாட்டான் என்பது இப்போதாவது இந்த மரமண்டைகளுக்குப் புரிகிறதா?

'குட்டிக்கதைகள்' சொல்வதற்குப் புதியவர்கள் நீங்கள் எனவே குட்டிக்கதைகள் சொல்லி வீணே குட்டுக்கள் படுகின்றீர்களே! தமிழினின் தன்மானப் போராட்டம் உமது 'குருட்டுக்' கதைகளால் அழியும் என்று எண்ணிவிடாதீர்கள்! அது தொடரும் வெற்றிபெறும்.

பால் கொடுத்து — பழம் கொடுத்து பவுஞலே செய்து கூண்டு கொடுத்தாலும் நான்கறிவு கொண்ட கிளி நாளிலும், பொழுதிலும் தனது 'சிறை' வாழ்வை நினைத்து வருந்துகிறது!

(7-ம் பக்கம் பார்க்க)

## சிங்களவர் சிரிக்கிறார்களாம்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வர் தாம். ஒரு யார் துணியின் விலை என்ன? ஒரு ரயில் பெட்டியின் விலை என்ன? இதற்காக யாராவது காந்தியைப் பழித்தார்களா? உள் நாட்டில் ஓரிரு மாதங்களில் துணி செய்து கொள்ளலாம் —வெளியிலிருந்து வாங்காது விட்டாலும். ஆனால் ரயில் பெட்டியை அப்படிச்செய்து கொள்ள முடியுமா? அந்த நிலையிலா அப்போது இந்தியா இருந்தது. துணியை விட, ரயில் மிகவும் தேவையான, அத்தியாவசியமான பொருளாகவும், அதேநேரத்தில் உள் நாட்டில் இலகுவாக செய்துகொள்ள முடியாத பொருளாகவும் இருந்ததால் தான் காந்தி அடிகள் அப்படி நடந்து கொண்டார். அதுவே உண்மையான ராஜ தந்திரமும் கூட.

அதே போல், தமிழ் மக்களும், தமிழரசுக் கட்சியும் சிங்கள ஸ்ரீயை முதலில் எதிர்த்தார்கள். போராடினார்கள்; அழித்தார்கள்; தமது எதிர்ப்பை—சிங்களச் சொல் அல்லது எழுத்து ஒன்று தமிழர்களிடையே புகுத்தப்படுவதை ஆட்சேபித்து அதனை—தமது சம்மதமின்மையை உலகறியச்செய்தார்கள். ஆனால் அரசாங்கம் தொடர்ந்தும் (ஜனநாயகத்துக்கு விரோதமாக) சிங்கள ஸ்ரீயை திணித்து வந்ததால் யாராலும் ஒன்றும் செய்ய முடியாமல் போயிற்று. அதற்காக 'ஸ்ரீ'யை தமிழரசுக்கட்சியோ, தமிழர்களோ, ஏற்றுக்கொண்டார்கள் என்று அர்த்தமல்ல. ஸ்ரீ'க்கு எதிராக, அது புகுத்தப்பட்டபோது முதன் முதலில் அதை எதிர்த்து தமது சம்மதமின்மையை — அதிருப்தியை காட்டியதே போதும். தொடர்ந்து — வேறு பல முக்கிய பிரச்சினைகளை விட்டுவிட்டு—ஸ்ரீயை எதிர்த்து போராடிக்கொண்டிருக்க முடியுமா? 'ஸ்ரீ' வாகனங்களில் செல்லாமலிருக்க முடியுமா? வேறு வாகனங்களைத்தான் எம்மால் உற்பத்தி செய்யவும் முடியுமா?

காந்திஜி துணியை எதிர்த்தார், 'ரயிலை' ஏற்றார் அதற்காக அவர் அந்நியப் பொருள்களை ஏற்றார் என்று அர்த்தம்? துணி இலகுவில் உற்பத்தி செய்யக்கூடியது. அப்படியல்ல 'ரயில்'. அதே போல், தமிழரசுக் கட்சியும் சிங்கள 'ஸ்ரீ'யை எதிர்த்தது. 'ஸ்ரீ' வாகனங்களைப் பகிஷ்கரித்தது. முதலில் எதிர்ப்புக் காட்டியாயிற்று; நாம் 'ஸ்ரீ'க்கு எதிரானவர்கள் என்பதை காட்டியாயிற்று. எனவே பின்னர் எதிர்த்துப் போராடாது விட்டனர். அதற்காக ஏற்றுக்கொண்டார்கள் என்று கனவு காணக்கூடாது. வேறு வாகனங்களை உற்பத்தி செய்ய முடியவில்லை. எனவே 'ஸ்ரீ' வாகனங்களை பகிஷ்கரித்து எமது எதிர்ப்பினைக் காட்டியபின், அவ்வாகனங்களைப் பயன்படுத்துகிறோம். அதற்காக ஸ்ரீயை நாம் ஏற்றோம் என்று அர்த்தம்?

இலங்கை குடியரசாக்கப்பட்ட தினத்தன்று ஹர்த்தால் நடத்தி எமது எதிர்ப்பைக் காட்டினோம். அதன் பின்பு அவ் எதிர்ப்பை ஒவ்வொரு நாளும் செய்யவில்லை என்பதற்காக குடியரசை ஏற்றுக்கொண்டோம் என்று அர்த்தம்.

வவுனியாவிற்குத் தெற்கேயுள்ள ம(ா)க்கள் (சிங்களவர்கள்) எம்மை (தமிழர்களை) பார்த்துச் சிரிக்கிறார்கள் என்கிறார் நண்பர் ரவீந்தா. அவர்கள் ஏன் சிரிக்கிறார்கள்? தமது சிரிப்பைக் கண்டு எமது போராட்டத்தை நாம் நிறுத்திவிடுவோம் என்பதற்காகவா?

காந்தி அடிகளைப் பார்த்து —அவர் உடையையும், எளிமைத் தோற்றத்தையும் பார்த்து 'அரை நிர்வாணப் பக்கிரி' என்று பட்டமும் வேறு சூட்டி வெள்ளையன் சிரித்தான். ஆனால் கண்ட முடிவென்ன? எம்மைப்பார்த்து சிங்களவர் சிரிக்கிறார்களாம். அவர்கள் நன்றாகச் சிரிக்கட்டும்.

— ஆ. [illegible]

## பாடநூல்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கணித புத்தகம் 6 ஆவது பாரம், முந்திய விலை ரூபா 2.50. தற்போதைய விலை ரூபா 3.25.

பெற்றோர்களுக்குள்ள கஷ்டங்களை எடுத்துச்சொல்வதற்காகவே நான் இவற்றை இங்கே குறிப்பிடுகிறேன். குழந்தைகளுடைய சீருடைகள் விடயத்திலும் பெண் குழந்தைகளாக இருந்தால் அவர்கள் அணிகின்ற வெள்ளை அணிகளுக்கான வெள்ளைச் சேலையின் விலை அதிகரித்து இருக்கிறது. பிள்ளைகளினுடைய காற்சாட்டைத் துணிகளின் விலை அதிகரித்து இருக்கிறது. இவையெல்லாம் அரசாங்கத்தினுடைய வரவு செலவுத் திட்டத்தில் இடம் பெறவில்லை என்றாலும் நாட்டில் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிற தாக்கம் என்பதை அரசாங்கம் கவனித்து அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும்.

உணவுப் பொருட்களின் விலை அதிகரித்திருக்கிறது. சீருடைகளின் விலை அதிகரித்திருக்கிறது. அப்பியாசப் புத்தகங்களின் விலை அதிகரித்திருக்கிறது. பரீட்சைக் கட்டணம் அதிகரித்திருக்கிறது. இப்பொழுது பாடசாலைப் புத்தகங்களின் விலையும் அதிகரித்து விட்டது. ஆகவே, தயவுசெய்து அரசாங்கம் இந்நிலைமையைப் பரிசீலனை செய்யவேண்டியது அதிமுக்கியமான கடமையாகும் என்று அரசாங்கத்துக்குச்சொல்ல விரும்புகிறேன்.'' (வரவுசெலவுத் திட்ட விவாதத்தின் போது)

## மக்கள் குரல்

## தமிழ்ப் பகுதிகளுக்குக் குடியேற வேண்டும்!

ஈழம் வாழ் தமிழ் மக்கள் தங்கள் பிறப்புரிமையைமீட்பதற்கு போராட்டம் மட்டுமே எஞ்சியுள்ள ஒரே வழி.

இப்போராட்டம் சாத்வீக முறைகளில் தொடங்கினாலும் அதை அடக்க வன்முறைகளையே நமது எதிரிகள் உபயோகிப்பார்கள். ஆகவே நாம் முன் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். தமிழ் ஈழத்தை விட்டு தென்னிலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்கள் தமிழ் பகுதிகட்கு குடிபெயரவேண்டும். மன்னார், வவுனியா, திருகோணமலை மட்டக்களப்பு அம்பாறை ஆகிய மாவட்டங்களில் உபரி நிலம் பெருவாரியாக இருக்கிறது. இவற்றில் சென்று குடியேற இப்பொழுதே முயற்சியிலீடுபட வேண்டும்.

மலைநாட்டில்வாழும்தமிழ் மக்கள் இந்தியப் பிரஜா உரிமை பெற்றிருந்தால் உடனடியாகத் தமிழ் நாட்டுக்குச் செல்லவேண்டும்.

தமிழ்நாடு இலங்கையை விட அதிகம் முன்னேறி இருக்கிறது. தற்போதைய நிலையில் ஒரு நபருக்கு தமிழ் நாட்டில் ஒரு ஆண்டுக்கு வருமானம் ரூ. 654/- இலங்கையில் ரூபா 640/- மட்டுமே; தமிழ் நாட்டின் முன்னேற்றத்தை நேரில் கண்டவருக்குத் தெரியும் இன்னும் பத்து வருடங்களில் தமிழ் நாடு உலக நாடுகளில் வளர்ச்சி அடைந்த நாடுகளில் ஒன்றாக இருக்கும் என்று;

அத்துடன் அந்தமான் தீவுகளில் குடியேற விரும்புகிறவர்களுக்கும் வசதிகள் இருக்கின்றன.

ஆகவே எவ்வளவு விரைவில் நாம் தென்னிலங்கையை விட்டு வெளியேறுகிறோமோ அவ்வளவு விரைவில் நமக்கு சுதந்திரம் கிடைக்கும்.

—ரி. குமாரசாமி.

கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.


# இப்பொழுது 4 வது வாரம்

## செல்லமகால்

(கொட்டாஞ்சேனை)

இம்பீரியல் (மட்டுநகர்) வின்சர் (யாழ்நகர்)



ஏ. வி. எம். ராஜன், முத்துராமன், வி. நாகையா, நாகேஷ், எஸ். வி. ரங்கராவ், எஸ். வி. சுப்பையா,

1971ம் ஆண்டு "இருளும் ஒளியும்" படத்தில் (இரு வேடங்களில்) நடித்தமைக்காக சிறந்த நடிகைக்கான பரிசைப் பெற்ற

வாணிஸ்ரீ

—நடித்த—

# இருளும் ஒளியும்

ஈஸ்ட்மென் கலர் - வெறிஜி

---

இயக்குனர்திலகம் கே. எஸ். ஜியின் மற்றுமோர் சாதனை தமிழகத்தின் வெற்றிச்சித்திரம்

# 9வது வாரம்

கெப்பிட்டல் (கொழும்பு) வெலிங்டன் (யாழ்நகர்)



சிவாஜிகணேசன், பத்மினி, நம்பியார், ஜெய்சங்கர், வாணிஸ்ரீ, நாகேஷ், சகுந்தலா,

—நடித்த—

ஆஸம் ஆர்ட்ஸ்

# குலமா குணமா

திரைக்கதை - வசனம் - டைரக்ஷன்

K.S. கோபாலகிருஷ்ணன்

---

# 3 வது வெற்றி மாதம்

வெள்ளி விழா சித்திரம்

சென்ட்ரல் (மருதானை) ஜோதி (திருமலை) ராணி (யாழ்ப்பாணம்)

- சிவாஜி கணேசன்
- ஜெயலலிதா
- மனோரமா
- எம். ஆர். ஆர். வாசு
- வீ. கே. ராமசாமி, சுபா நடித்த



# பட்டிக்காடா பட்டணமா

டைரக்ஷன்: பி. மாதவன் பாடல்கள்: கண்ணதாசன் இசை: எம். எஸ். விஸ்வநாதன்.


இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1972ம் வருடம் [illegible] மாதம் [illegible] திகதி [illegible]க் கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org